ஓம் விநாயகநம




# சந்திரதீபம்



## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை


தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது



வெள்ளிக்கிழமை [1-8-1980]

ரௌத்திரி வருஷம் ஆடி மீ 18உ

இதழ்: 3 சுடர்: 16



பொய்மையைச் சாடும் மலர்

University of Jaffna Sri Lanka
RECEIVED

## கோடி பொன்உடைய பெருவள்ளலாயினும் அவர் பொய்மையாளரே!

### பீடி சவுக்காரம் புகையிலை இரும்பு பிடவை பலசரக்கு இயந்திரதொழிற்சாலையால் மிதந்தவரைப் போற்றி வள்ளல் என்பதால் உங்கட்கும் நலமில்லை சைவநன்நெறிக்கும் உயர்வில்லை

# பொய்மையாளரைப் போற்றி விழா எடுக்கும் நம்மக்கள் இந்த உண்மையை உணர்வாரா

இன்று எமது தமிழ்நாட்டில் பெரிய ஒரு பிலைடதிலவுகின்றது. அதுயாதெனின் சிலர் கோயில்களைப் புதுப்பிக்க கோபுரம் கட்ட தேர்செய்யப் பணம் சேகரிக்க விரும்பி முதல்செய்வது பஞ்சமா பாதகங்களைக் கூசாதுசெய்து பணம் தேடித் தானும் தன் சகபாடிகளும் உல்லாசமாக வாழும் செல்வந்தரை அணுகிப் பொருள்வேண்டி போற்றிப் புகழ்ந்து தெண்டனிட்டு நின்று பொருள் சேகரிப்பதாகும்.

இந்தவகையாகப் பொருள்கேட்கப் போகும்போது முதலாளிமார் பணம் கேட்க வந்தாருடைய கனம் தண்டிகை கார் உத்தியோகம் பதவி கண்டே பணம்கூடக்கொடுப்பர்.

உதாரணமாக வருமானவரிக் கந்தோரில் கடமையாற்றுபவர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது அரசாங்க உதவி அதிபர் அரசாங்க அதிபர் பாராளுமன்ற உறுப்பினர் அல்லது அழகுடைய பண்டிதைகள் ஆசிரியைகள் சகிதம் சென்று கேட்டால் ஆளைக்கண்டு கொடுப்பதும் ஆயிரக்கணக்கில் நடக்கும்.

இந்தநிலையில கண்ணுக்குக் கனமில்லாதவர் பொருள் கேட்டால் கொடுபடாமல் அவர்மனம் நொந்து திரும்பி வரும் வரலாறுகள பல நம்நாட்டில் உண்டு.

இங்கு கனம் இல்லாதவர் என்றது தண்டலுக்குத் தினமும் வரும் சாமிகளைக் குறிக்கவில்லை. எமது நாட்டில் குறிப்பாகப பனிப்புலம் போன்ற கிராமங்களில் இருந்து பல தண்டல் சாமியள் வரும். அம்மாளுக்கு அன்னதானம் துர்க்கைக்குச் சங்காபிஷேகம் கதிர்காம யாத்திரை சீரணி நாகம்மாள் முதல் பலதிக்கும் உபயம்செய்யப் பொருள்கேட்டு வருபவரை நான் குறிப்பிடவில்லை. ஐயோ! இந்தச் சாமியள் பொருள்வேண்டிய அன்று பின்னேரம் திறமான கள்ளுக்கடையில் நிற்கும்.

எனக்குத் தெரியப் பல சாமியள் பிள்ளையார்சாமி முருகன்சாமி அம்மன்சாமி வேலன்சாமி நரசிங்கச்சாமி நரிக்குட்டிச்சாமி நாய்க்குட்டிச்சாமி சட்டிச்சாமி முதல் பல சாமியள் தண்டும் காசில் கள்ளுக்குடியாதவர் மீன் தின்னாதவரைக் காணமுடியாது.

ஆதலால் இவர்களை நான் இங்கு கனம் இலாத உண்மையாளர் வரிசையில் வைக்கவில்லை. இவர்களைவிடுத்து உண்மை அன்பால் திருப்பணி வேலைக்கோ அல்லது தன்வாழ்க்கைக்காகவோ செல்வந்தரை நாடும் அடியார்களைக் கல்விமான்களை அறிவாளிகளையே குறிப்பிடுகின்றேன்.

இவர்களைப்பற்றித்தான் கீழேஉள்ள சுந்தரமூர்த்திசுவாமியின் திருப்பதிகம் கூறுகின்றது. அதாவது இவர்களை நோக்கி உங்களது கவித்திறன்மூலம் இந்தப் பொய்மையாளரான செல்வந்தரைப் பாடாதீர் அது ஓர் பழி என்பது அவருடைய பாடலின் கருத்தாகும். ஆகவே உங்களது வாழ்க்கைக்கோ வேறு தேவைகளுக்கோ பணம் தேவைப்படும்போது அப்படிப் பட்ட பழியாளரைப் பாடாது சிவனையே சித்தத்திருத்திப் பாடுவீராகில் நாம் பாடிடும் பாடலுக்கு இரங்கிச் சிவன் எமக்குவேண்டிய பொருள் உதவிசெய்திடுவார்.

இந்த ஒரு நிலையை நாம் நன்கு உணரவேண்டும், வாழ்க்கையில் ஓர் சிறு சன்மானத்திற்காகப் பாதகரைப் பழியாளரைக் கொலைமூலம் அரசாண்டவரைத் தவநெறியில்லாதவரைப் போற்றுதல் ஓர் பழியுமாகும் என்பதைச் சைவநூல்களும் சொல்கின்றன.

இந்த ஒருநிலையில் ஒரு கேள்வி எழுகின்றது. அதாவது சுந்தரர் பாடிட சிவன் பொன்கொடுத்தார்; சம்பந்தர் பாடிடப் பொன்கொடுத்தார்; ஆனல் நாம் பாடினல் பொன்தருவாரோ கடவுள்! அப்படி இங்கு இப்பொழுது நடைபெறுதல் இல்லையே என அக்கேள்வி எழக்கூடும்.

அதற்கு நாம் தரும் பதில் சிவன் வஞ்சமுடையர் அன்று, ஒருவர்க்கு ஒருமாதிரியும் இன்னொருவருக்கு இன்னொருமாதிரியும் நடப்பவர் அன்று எல்லாருக்குமே அவர் அருள்புரியவர். சென்று கேட்டால் நிச்சயம் பெறலாம்.

இந்நிலையில் கேட்பவர் எப்படிக் கேட்பது எப்படிக் கண்டு கேட்பது என்பதைத் தெளிந்து கொண்டால் அதன்பின் கேட்டது கிடைக்கப் பெறும்.

கேட்பதன்முன் காணவேண்டுமே எங்ஙனம் காணுவது எங்கே இருக்கென்று காணுவது இதற்கு விடை கூறுவது நமது கடமை.

பெரியபுராணம் இதைப்பற்றி என்ன சொல்கிறது என்பதை அவதானித்தால் முதல் கடவுளைத் தொண்டு தூய்மை ஒழுக்கம் இவற்றில் காணுங்கள்; அடுத்து உயிர்களிடத்து கடவுளைக் காணுங்கள்.

உயிர்கள் யாவற்றிலும் சிவன் உண்டு என்பதைப் பெரியபுராணம் வலியுறுத்துகின்றது. ஒரு சேரஅரசரின் நாமம் கழறிற்று அறிவார் என்பதாகும். கழறிற்று என்றால் பேசுவது சொல்வது என்பது பொருள். யாது கழறிற்று என்பது கேள்வி? அதற்கு யாரும் யாவும் கழறின உணர்வார் அந்த அரசர் என்பதாகப் பெரியபுராணம் சொல்கிறது; இதனாலே அன்பு எல்லா உயிரிடத்தும் கொள்ளல் கடவுளை அடையும் வழி.

இந்த சேர அரசர் எல்லா உயிர் வர்க்கத்திடையும் அன்புகொண்டு வாழ்ந்தவர். அவரின் இந்த ஒரு நிலையால்தான் சிவனை அடைய வல்லவராஞர். ஆதலினாலே கடவுளை அன்பினால்தான் அறியலாம் அன்றி வேறுவழியில்லை வகையில்லை.

சைவம் சிவசம்பந்தம்; சைவம் அன்புமயம்; சைவம் அடக்கமுடையது. சைவம் ஆரவாரமில்லாதது. சைவம் எவ்வுயிரும் தன் உயிர்போல் எண்ணுவது. சைவம் கடவுளை உயிரிடத்துக் காண்பது. இவ்வளவு நெறியும் ஒருவரிடம் சைகூடின் அவர் அன்புடையர் இதுதான் நெறி; இவை அல்லாதன அவம். பாவத்தின் தொடர்புடையனர்.

இதுவே திருவருள். ஆகையால் இந்தக் கோட்பாட்டில் அமைந்தவர் யாவர்க்கும் சிவனிடத்து வேண்டியதைப் பெறலாகும்.

ஆதலினாலே நன்மையை விரும்புவார் யாவர்க்கும் ஒழுக்கமே செல்வமாகும் ஒழுக்கம்தான் செல்வம்: சிவன் திருவடி போற்றல்தான் செல்வம்: செல்வத்துட் செல்வம் சிவச் செல்வம். மற்றைய செல்வம் பழுதாவதும் மனிதரைப் பழுதாக்கிவிடுவதுமாகும். இதை உணரவேண்டும். சிறிது காசுவந்தவுடன் முருகன் அருள் என்கின்றார். வியாபாரத்தில் வாய்ப்பு வந்தவுடன் முருகன் அருள் என்கிறார். பிள்ளைகள் கலியாணம் செய்தால் முருகன் அருள் என்கின்றார். ஆனல் உண்மையில் இவை அருள் அன்று பதில் இருள் உலகில் தள்ளும் பொருள் என்பதாகும்.

மனிதப்பிறவியில் வேண்டுவது சோறு, உடுக்கத் துணி அத்துடன் இடரில்லாமல் வாழ்தல். நோயால் இடர்பட்டு வயோதிபத்தில் மூத்து பாயில்கிடந்து தடுமாறி பகை முதலியவற்றால் நலிபடாதிருத்தலாகும்.

இதனைப் பெறுதல் சிவனை அன்புடன் பாடுதலால் எய்தலாம் என்பதை எம்பிரான் சுந்தரர் தெரிவிக்கின்றார். இதனை நன்கு தெளியுங்கள். சீவன்களுக்கு துயர்புரிதல் சிவன்பால் செய்யும் பழுதேயாகும் என்பதை நினைவில்கொண்டு சிவனை தூயமனதுடன் பாடினல் சிவனிடம் கேட்டதைக் கேட்டவாறு பெறலாகும்.

இதற்குச் சான்றாக சிவனிடம்வேண்டியதை வேண்டியவாறு பெற்றுக்கொண்ட காரைக்கால் அம்மையாரைப்பற்றி இங்கு குறிப்பிடப்போகின்றேன்.

காரைக்கால் அம்மையார் இருமுறை சிவனிடம் மாம்பழம் பெற்ருள் பேய்வடிவம் வேண்டிப் பெற்ருள் இன்றும் உயிரோடு இருக்கின்ருள். இப்படி எல்லாம் பெறற்கு சிவன் காரைக்கால் அம்மைக்கு மட்டும் அருள்செய்த காரணமும் அதுவன்றி ஏனையோருக்குஅருள் செய்யாக் காரணமும் என்ன எனக் கேட்கலாம், அப்படிக் கேட்போருக்குப் பெரிய புராணம் தக்க பதில் தருகிறது.

உலகில் வேண்டியதைப் பெறுதற்கு "மேல்நிலை உணர்வுகள" வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே சேக்கிழார் பெரியபுராணத்து காரைக்கால் அம்மையார் பேய் வடிவம் வேண்டிப்பெற்றபோது அவ்வண்ணம் வேண்டிப் பெற்றதற்கு காரணம் மேல்நிலை உணர்வுகூரலால் காரைக்கால் அம்மை வேண்டியதைப் பெற்ருர் என்கின்ருர்.

அன்னை ஔவைப் பிராட்டியும்வலி உறுத்திக் கடவுள் உன்னிடம் இருப்பார் எப்படி என்ருல்,

"எல்லா உயிரையும் ஈசனெனக் கருதில் நில்லாளுே ஈசன் நிலைத்து, என்றும்,

"மாசற்ற கொள்கை மனத்தில் அடக்கிஞல் ஈசனைக்காட்டும் உடம்பு" என்றும் கூறுகின்ருர்.

மேல்நிலை உணர்வு கூர்தல் என்பது இவை இரண்டு கருத்துமேயாகும். இதில் முதலாயதில்,

உயிர் எல்லாம் கடவுள் வடிவம் என்ருல் இவன் பள்ளன் இவன் பறையன் இவன் பிராமணன் இவன் தச்சன் இவன் கொல்லன் இவன் அண்ணன் இவன் அம்பட்டன் இவன் சோனகன் இவன் சிங்களவன் இவன் சைவன் இவன் வேதக்காரன் இவன் கூடாதவன் இவன் நல்லவன் நாங்கள் முதலிபகுதி அவர் கோவியர் நாங்கள் பெரிசு அவர் சிறிது என எண்ணவருமோ!

இரண்டாவதில் மாசுஇலாத கொள்கை என்ருல் அவர் சண்டியன் அவருக்குப் பயம், அவர் கார் வைத்திருக்கிருர். அவர் எம். பி. எனது மக்களுக்கு உத்தியோகம் தருவார் அவருக்குப் பயம்.

எனக்கு நல்ல வீடு இல்லை என்னிடம் காசு இல்லை. என்னிடம் கார் இல்லை. அவர்கள் பிள்ளையள் எல்லாம் உத்தியோகம் எனது பிள்ளைகளுக்கு அது இல்லை. எவக்கு நடப்பு இல்லை. அவர்க்கு உண்டு. என்னை யாரும் கவனிக்கிருரில்லை. அவர்க்கு எத்தனையோ பட்டம் என்ற இந்த மனக்குறைபாடும்;

பொருளைவைத்துக்கொண்டு இல்லை என்னுதல், பிறரை ஏமாற்றுதல் பிறர் பொருளை அபகரித்தல் அருளிலைக்கு பொருள்விற்றுச் சம்பாதித்தல் பிறரை ஆள் இல்லாத இடத்து இகழ்தல் வலியிலாருக்கு அடித்தல் பெண்களைத் துயருறுத்தல் கணவனை இகழ்தல் வழியைத் தடைசெய்தல் அரசாங்கத்தை ஏமாற்றுதல் இப்படியான பல செயலும்:

வஞ்சனை பொருமை காமம் குரோதம்முதலியனவும் என்றென்றும் மாசு உடையன. இவைகள் நீங்கிய கொள்கை உடையவர்க்கு உடம்பு கடவுள் எங்கிருக்கிருர் எனக் காட்டும்.

அப்பொழுது இவ்வளவு உயர்வான சிந்தையில் நிற்றல்தான் மேல்நிலை உணர்தல் எனப்படும்.

எம்பிரான் சுந்தரர் பரவையம்மையாரைத் திருமணம் செய்தபின் பரவையார்க்கு பொருள்வேண்டி திருப்புகலூர் எனும் தலத்தில்சென்று சிவனைப்பாடிப் பொருள்கேட்டார். பொருள் அன்று கொடுபடவில்லை. வழமையாக இப்பொருள் கேட்டால் கிடைப்பது. ஆனல் இம்முறை கிடைக்கவில்லை.

எம்பிரான் சுந்தரர் தமக்குப் பொருள்வேண்டி யாரையும் சென்று புகழ்ந்து போற்றிப் பொருள்வேண்டுவதில்லை. இறைவனிடமே கேட்டுப் பொருள்பெறுவது வழக்கம். இவர் பாடலுக்கு சிவன் திருமுதுகுன்றத்தில் வைத்து பன்னிரண்டாயிரம் தங்கப்பவுண் கொடுத்தவர். இப்படி ஒருதரமல்ல. பலமுறை காசு கொடுபட்டது.

அதேபோன்று இம்முறை திருப்புகலூரில் வந்து பொருள்கேட்டுப் பாடினர். பொருள் கிடைத்திடாதபடியால் பொருள் பெருமல் எப்படி அகல்வது எனும் கருத்தால் கோயிலில் அன்றிரவு தங்கவேண்டி வந்தது.

இரவு தங்கி அங்கு சயனித்திடுப்பதற்கு தலையணையாகப் பாவித்திடும் பொருட்டுச் சில செங்கட்டிகளை வரவழைப்பித்து அவற்றைத் தலையணை போல் அடுக்கி அதன்மேல் தனது தலையைவைத்து எம்பெருமான் சுந்தரர் பள்ளிகொண்டார்.

பள்ளிகொண்டு வைகறை எழுந்து செங்கட்டிகளைப் பார்க்கும்போது அவைகள் யாவும் தங்கக்கட்டிகளாக இருந்திடககண்டு அவற்றை வியந்து திருவருளைப் போற்றிப் பாடிய பதிகமே இதுவாகும்.

அவர் உலகமக்களிடம் எம்பிரான் அருளின் கருணைபற்றிக் கூறுவதையும் புலவர்கள் பாதகராகும் பணம் படைத்தோரைப் பாடி அவர் பொருள் கொடாதநிலையில் வாட்டமுறுதலையும் நன்கு விபரித்துக் கூறுதலையும் காணுங்கள்.

இவ்வுலகில் எவர் ஒருவராதல் பணத்தைப் பாதகவழியிலன்றி வேறு வழியில் தேடமுடியாது. பழியான வழியில் பொருள் தேடியவரை அப்பழி பிறருக்குக் கொடுக்கவிடாது. ஆதலினலே பழியுடைய பொய்மையாளராகும் பணக்காரரை மதித்து அவர்வாய்தல் சென்று பொருள்கேட்பதிலும் தூயதான நல்லவழியில் வாழ்ந்தால் உங்களுக்குச் சிவன் நல்லருள்செய்வான் என்னும் அப்பாடலைக் கீழே தருகிருேம். ஓதி இன்புறுங்கள்.

# வஞ்சநெஞ்சரை பஞ்சதுட்டரை பாவியை பழி யாளரை புகழாதீர் எனும் பதிகம்

## திருப்புகலூர்

பண் கொல்லி

திருச்சிற்றம்பலம்

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும் சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடா தேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும் ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவலோகம் ஆள்வதற் கியாதும் ஐயுற வில்லையே.

கூசுதலாதார் தம்மைப் பெரிதாகப் புகழ்ந்து சிறப்புடன் இன்னும் வாழ்வாயாக என்று இச்சை வார்த்தை பல பேசினலும் அல்லது அவர்க்குச் சார்பாகநின்று ஏவல் செய்யினும் அத்தகையதன் தொண்டர்க்கே பொருள் சிறும்பாகக் கொடாத பொய்மையாளராகும் பணக்காரரைப் புகழ்ந்து பரிசுபெறும்பொருட்டுப் பாடாது எந்தை பெருமான் இருக்கும் திருப்புகலூரையே புலவீர்களான நீங்கள் பாடுங்கள். அவ்வகை பாடினல் இப்பிறவியில் திருப்புகலூர் ஈசன் உண்ணச் சோறும் உடுக்கத் துணியும் தருவார். அத்துடன் துயரமான இடரில்நின்றும் நீங்கலாம். அதுவன்றி உயிர் நீங்கிய பின் சென்று சிவலோகத்தில் ஆண்டு இருப்பதற்கு யாதும் ஓர் ஐயுறவு இல்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

தொண்டர் — ஏவல்செய்வோர். பணக்காரர் தனது வேலையாட்களுக்குத் திருப்தியான பொருள் கொடார் என்பது பொருள்.

புலவர்கள் உலகில் பெரும் தனவந்தரை அரசரைப் புகழ்ந்து பாடி அவரிடம் பொருள் கேட்பது இயல்பு, இன்றும் இதனை நாம் காணலாகும், கவித்திறனின் நலத்தை இறந்திடும் மனிதரைப் பாடிப் பரிசில் பெற நினைவதிலும் பிறவாத இறவாத பெருமானைப் பாடினல் உங்கட்கு எல்லா நலமும் கிடைக்கும் என்பது கருத்து, ஆதலால் இம்மையில் (இப் பிறவியில்) சோறும் சீலையும் பெறுவதில் எக்குறைவும் ஏற்படாது, அதுவன்றி இந்த உயிர் நீங்கியபின் உயிர் போமிடம் சிவலோகமாக அமைந்து துன்பம் இலாது இன்பம் பெறலாம் என்பது கருத்து,

திருப்புகலூர் அன்று புண்ணியமும் புனிதமும் நிறைந்த தபோதனர்கள் இருந்த இடமாக உள்ளது, ஆதலினல் அத்தலம் கடவுளுறையும் இடம் அதனைப்பாடுதல் எல்லா நலனும் தரும் என்பது குறிப்பு.

மிடுக்கி லாதானை வீம னேவிறல் விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறி னுங்கொடுப் பார்இலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணியன் புகலூ ரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேல்அமர் உலகம் ஆள்வதற் கியாது மையுறவில்லையே,

மிடுக்கு வீரம் இல்லாத பணக்காரனை அவன் வீரத்தில் வீமனே வில்லில் மிக்கும் வலிஉடைய விசயனே அதுவன்றி விறபோரில் மிகு தனியான சமர்த்தனே என்றும் கொடுக்க மனமிலாதானை இவன் கொடையில் பாரி என்று கூறிப் பாடல்பாடிப் புகழ்ந்தாலும் பரிசு கொடுப்பார் ஒருவரில்லை. அவர்கள் கொடுக்கார்கள். ஆதலினல் திருநீற்றின் பொடிபூசிய மேனி உடையஎம் புண்ணியன் இனிது அமர்ந்திருக்கும் புகலூரைப் புலவர்களே பாடுங்கள். நீங்கள் ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்காய் இருக்கும் தேவ உலகங்களை ஆண்டு இருப்பதற்கு யாதும் சந்தேகம் இல்லை.

காணி யேற்பெரி துடைய னேகற்று நல்லனே சுற்றம் நற்கிளை
பேணி யேவிருந் தோம்பு மேயென்று பேசி னுங்கொடுப் பார்இலை
பூணி பூண்டுழப் புட்சி லம்புந்தண் புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணி யாய் அமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே

பெருங்காணிசொர உடையனே கல்வியில் சிறந்து நல்லவனுயவனே. உனது சுற்றம் நல்ல சந்ததிகளைப் பேணி விருந்து ஓம்புகின்றீர் என்று பேசிப் புகழ்ந்தாலும் அதைக்கேட்டு இரங்கிக் கொடுப்பார் ஒருவரில்லை. மிக இனிய ஓசைசொண்டு பறவைகள் ஓசையிடச் சிறந்துற்ற குளிர்மையான திருப்புகலூரைப் புலவர்களே பாடுங்கள், அவ்வாறு நீர் பாடினல் அடையும் பரிசு தேவ உலகில் அசையாத திருவுடைய ஒருவராகின்று தேவஉலகத்தை ஆள்வதற்கு யாதும் ஓர் சந்தேகமும் இல்லை.

நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துடல் நடுங்கி நிற்கும்இக் கிழவனை
வரைகள் போல்திரள்தோள னேயென்று வாழ்த்தினுங்கொடுப் பார்இலை
புரைவெள் வேறுடைப் புண்ணி யன்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அரைய னுப்அமர் உலக மாள்வதற் கியாது மையுற வில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரைகள் தோன்றி உடலும் தளர்ந்து மூப்பாகி உடல் நடுங்கிக் கொள்ளும் ஒரு கிழவன் அவன் செல்வந்தராக இருந்தால் பரிசுபெறும்பொருட்டு அவனிடம் சென்று அவனை மலைபோலத் திரண்டதோள் உடையவனே என முகமனால் வாழ்த்தினாலும் அத்தகையோர் உங்கட்கு வேண்டிய பரிசில் தருவார் இல்லை. ஆனால் நீங்கள் நரைத்த வெண்ணிறமுடைய இடபத்தினை வாகனமாகக் கொண்ட புண்ணியன் அவன் இருக்கும் திருப்புகலூரைப் புலவர்களே பாடுங்கள். அவர் உங்களை மிக மேலானவக்கி தேவஉலகம் யாவற்றையும் ஆளும்படியான ஓர் பரிசை உங்கட்குத் தருவார்; இதைப் பெறுவதில் யாதும் சந்தேகமில்லை.

பூம்புகலூர் எனப் புகலூர் புண்ணியம் நிறைந்த தாதலின் அத்தகைய புனிதத்தலத்தைப் பாடுதல் மேன்மையில் வைக்கும் என்பதில் சந்தேமில்லை என்பது பொருள்.

வஞ்ச நெஞ்சனை மாச முக்கனைப் பாவி யைவழக் கில்லியைப்
பஞ்ச துட்டனைச் சாது வேயென்று பாடி னுங்கொடுப் பார்இலை
பொன்செய் செஞ்சடைப் புண்ணி யன்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோயறுத் துஞ்சு போவதற் கியாது மையுறவில்லையே.

வஞ்சகம்கொண்ட நெஞ்சுடையவனை பொல்லாத பழிவேலைகளில் ஈடுபடுபவனைப் பெரும் பொய்சொல்பவனைப் பாவியை நல்வழக்கம் இல்லாதவனை பஞ்சமா பாதகம் செய்பவனை நீ ஒரு சாது என்று பாடினாலும் அத்தகையோர் அதைக் கேட்டு பரிசு கொடுப்பார் ஒருவர் இல்லை. ஆனால் பொன்போல் மிளிரும் செஞ்சடை உடைய புண்ணியன் சிவன் இருக்கும் திருப்புகலூரைப் புலவர்களே பாடுங்கள். பாடினால் உங்கள் நெஞ்சிடத்தில் உறும் நோய்கள் நீங்கப்பண்ணி நீவிர் உய்ந்து போவதற்கு யாதும் ஓர் சந்தேகமில்லை.

ஈனம் படைத்தவரும் பொருள் மேல் வாஞ்சை உள்ளவரும் எப்பொழுதும் வஞ்சகராகவே காணப்படுவர். பிறர் துயரம் அறியார் துன்பப்பட்டு வருந்தி நின்று பொருள் கேட்டாலும் அதை சிந்தனையில் எடுக்கார்.

பஞ்ச துட்டர் என்பது கொலை களவுகள் காமம் புலாலுண்ணல் ஆன இதனைச் செய்வோர் களாகும். இவர்களிடம் தான் பணம் சேரும் பாதகம் செய்யாதவனிடம் பணம் சேர்வது மிக மிக அரிது எந்த ஒரு பணக்காரரையும் எடுத்துப் பாருங்கள் அவர்களிடம் வெளிப்படையாகக்காண விட்டாலும் பாதகம் இரகசியமாகும். காசு எப்பொழுதும் பாதகங்களை செய்விக்க வைத்திடும், அது அந்தச் செயலில் ஒரு போது கூசாது காசுக்குரிய இயல்பு அது இதனைத் தெரிவிப்பதால் காசு உள்ளவனை வஞ்ச நெஞ்சன் மாசறக்க பாவி வழக்கில்லி பஞ்சதுட்டன் என்பதை பாருங்கள் காசு உள்ளவன் எப்பொழுதும் சழக்கான கருமத்தில் ஈடுபடுபவன்.

அடுத்து வளக்கில்லி எனக்கூறியது வேதவழக்கங்களுக்கு உடந்தையாகார் என்பது கருத்து. கோயிலில் ஒலிபெருக்கி பாவிப்பது சுவாமிக்கு லயிற்று அடிப்பது வில்விசை பொப்பிசை பாட்டுக்கச்சேரி மேடைபோட்டு வைப்பது இவையயாவும் வழக்கம் இல்லாத செயல். ஆதவால் வழக்கில்லி என்றார்.

நெஞ்சில் நோய் என்றது: காமம் குரோதம் உலோபம் கொலை களவு யாவும் நோய் போல்வன. ஒருவனது உடம்பில் நோய் ஏற்பட்டால் அது அவரை மரணத்திக்கு கொண்டு செல்வது போன்று நெஞ்சத்தில் இந்த பஞ்சதுட்டத்தனம் சழக்கு வழக்கமிலாச் செய்கை இவையாவும் தீங்கினை ஏற்படுத்தும். உடம்பில் நோய் உடலைக் கொல்வது போன்று. நெஞ்சில் பீடித்த இந்த பொய் ஆன்மாவைப் பந்திகும்; அழுக்காறு அவா வெகுளி ஆன்மாவைப் பந்திக்கும்மென யோகசுவாமி சொல்வது காண்க. ஆனதினால் புகலூரைப் பாடுவதால் இந்த பஞ்சதுட்டத்தனம் வழக்கமிலாத செயல் ஏற்படாது என்பது கருத்து.

நலம்இ லாதானை நல்ல னேயென்று நரைத்த மாந்தரை இளையனே
குலம்இ லாதானைக் குலவ னேயென்று கூறினு ங்கொடுப் பார்இலை
புலமெ லாம்வெறி கமழும் பூம்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலமு ராதமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே.

நலம் இல்லாதவனை நல்லவன் என்றும் நரை உடைய மனிதரான வயதில் மூத்தோரை இளையவனே நல்லகுலத்தில் பிறவாதவனை உயர்ந்த குலத்தில் பிறந்தவனே என்று கூறினாலும் அதைக்கேட்டும் அதற்காக மகிழ்ந்து பொருள் கொடுப்பார் யாருமில்லை. ஆனால் அந்த விடுத்து நீர் வளத்தினால் நல்ல பூமரங்கள் வளரப்பெற்று அம் மரங்களில் மலர்ந்த பூக்களால் தேன் சொட்டவும் வாசனை மணந்திடவும் அதனைவண்டினங்கள் மதுவெறியால் இசைபாடவும் விளங்கியபூம்புகலூரை புலவர்களே பாடுங்கள் பாடினால் யாது துன்பம் இலாது தேவஉலகைச் சென்று ஆண்டிடுவதற்கு யாதும் சந்தேகம் இல்லை.

சிறுமையான செயல் களான மதுசேர்த்தல் மீன்விற்பனை இறைச்சி விற்பனை முதலியவற்றைச் செய்வோரை நாம் பெரிய மனிதர் என்று புகழ்ந்தாலும் ஒருபோதும் கொடார். இன்று சிறுபான்மை மக்களிடம் எவ்வளவு நலனை நாம்புகட்ட முற்பட்டாலும் சிறுபான்மை மக்கள் தமது சிறுமைகளை ஒருபோதும் விடார். பொய் சண்டித்தனம் முதலிய பல நலமிலாத செயல்களை இவர்கள் செய்து வருவதை அநுபவத்தில் காணலாகும்.

தொழிலிற்கேற்பதேநலம், ஆகவே ஒருவனது நலம் கெட்டவுடன் தான் அவன் உள்ளத்தில் பாவத்திற்குரிய செயல்கள் காணப்படும் பாவச் செயலைச் செய்வோன் நலப்படான் என்றதால் நலமிலான் என்கிர்.

நோய னைத்தடந் தோள னேயென்று நொய்ய மாந்தரை விழுமிய
தாயன் றேபுல வோர்க்கெ லாமென்று சாற்றினுங் கொடுப் பார் இலை
போயு மூன்றுகண் குழியா தேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆயம் இன்றிப்போய் அண்டம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே.

நோயுடையவனை விசாலித்த தோளுடையவனே என்றும் மிக அற்பத்தனமுடைய மனிதரை புலவர்க்கெலாம் தாய் போல்பவன் அல்லவா என்றும் பொருள்பட உரைத்தாலும் புகழ்ந்தாலும் அதற்காக இரங்கிக் கொடுப்பார் யாரும் இல்லை. ஆதலால் புலவர்களே நீவிர் இவர்களிடமாகச் சென்று இரந்து இரந்து இல்லையெனச் சொல்லிட திரும்பி வந்து திரும்பவும் இன்னொருவரிடம் சென்று அவரைப் புகழ்ந்து பாடிப் பொருள் கிடையாது திரும்பி வந்து வறுமையால் வாடி உடல் நலம் கெட்டு கண் குழிவிழுந்து வாடிவதங்காதே எம் பெருமானது திருப்புகலூரை உமது பாடலால் பாடுங்கள். புலவர்களே அவ்வாறு நீர் செய்திடல்லீராகில் இந்த உலகில் வாழ்ந்து நோயுற்று இடர்பட்டு அழுந்திடாது உய்ந்து உலக அண்டங்கள் யாவற்றையும் ஏதும் சிரமமிலாது ஆள்வதற்கு யாதுமோர் சந்தேமில்லை.

புலமை உடையார்க்கு வறுமை இயல்பு. எங்கும் அது காணப்படும். ஆனதினாலே புலமை உடையார் தம் கவித்திறமைக்கேற்ற மதிப்பைப் பெறற்கு தனவந்தரை அணுகுதல் இயல்பு.

பெரும்பாலும் நோயுடையவர் தனவந்தராய் இருந்தாலும் ஒருபோதும் கொடார். மற்றது கொடுப்பானுக்கு நோய்வராது. பொருளை பிறர்க்கு கொடாதவனிடம் தேடி நோய்வரக் காரணம் அவனது கொடுக்க மனமில்லாத நன்மையிலாத தன்மையே என்பதை திருமூலநாயனாரும் திருமந்திரத்தில் கூறுகிறார். அடுத்து நொய்யமாந்தர் என்பது அற்பத்தனமுடையர் என்பதாகும். உதாரணமாக தனம்படைத்த ஒருவர் பலசுவையான கறிகளுடன் சாப்பிடும்போது ஓர் ஏழை வறியவன் போய்க்கேட்டால் தான் உண்ணும் சுவைமிக்க கறியோடு கொடான். இது அற்பத்தனம்.

ஆயம் இன்றி என்பது ஓர் நல்நிலையை அடைவதற்கு ஏற்படும் சிரமமாகும். கடலைக் கடப்பதற்கு துறையில் ஆயங்கொடுப்பதை இன்றும் காணலாம். அதேபோல் வான அண்டம் செல்வதற்கும் ஆயம் கொடுக்க வேண்டுமோ என்றால் அது இல்லை. என்பது பொருளாகும்.

எள்வி ழுந்திடம் பார்க்கும் ஆகிலும் ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ள லேயெங்கள் மைந்த னேயென்று வாழ்த்தி னுங்கொடுப் பார்இலை
புள்ளெ லாஞ்சென்று சேரும் பூம்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளற் பட்டழுந் தாது போவதற் கியாது மையுற வில்லையே.

எள் விழுந்தால் எங்குவிழுந்தது என்று தேடிப்பார்த்திடும் மிகுபொருள் வாஞ்சையுடைய தனவந்தனை அல்லது ஈக்கும் ஒருதுளி தேன்கொடுக்காத ஓர் உலோபியாக இருப்பவனை அத்தகைய தனவந்தரைச் சென்று எங்கள் வள்ளலே எங்கள் குடிக்கு ஒரு தலைவனே என்று பல்லாண்டு வாழ்த்தினாலும் கொடுப்பவராக அத் தனவந்தர் இருக்கார். அப்படிக கொடுப்பார் ஒருவரில்லை. அதைவிடுத்து பறவைகள் எல்லாம் சென்று சேர்கின்ற திருப்புகலூர் என்னும் சிவ தலத்தை புலவர்களே பாடிச் கொள்ளுங்கள். அப்படியாயின் இவ்வுலகில் துயரம் கவலை என்ற சேற்றில் சிக்குண்டு வருந்தாது உய்ந்து போவதற்கு யாதுமொரு சந்தேகமில்லை.

எள் விழுந்த இடம் பார்ப்பவன் எட்டுக் கோடிரூபா வைத்திருந்தாலும் ஏதும் ஒருசதம் கொடுப்பானா? கொடான். எள் விழுந்த இடம் தேடுபவரின் நோக்குபவரின் நோக்கமென்ன ஐயோ எள் போச்சே எனவே தேடிடுவன். இத்த மனப்பாங்கில் சேமித்தவர் சேமிப்பதை விடுத்து கொடுப்பதற்கு மனங்கொள்ளார் என்பதையே தெரியப்படுத்துகிறார். ஈக்கு கொடுப்பது ஒரு தேன்துளி இதையும் நினையார் என்றது கசவாரத்தைக் குறித்தது.

இப்படியான கசவஞ்சகன் முன்னின்று நீ எங்கள் வள்ளல் எங்கள் அரசன் என்றெல்லாம் சொன்னால் ஒருசதம் தரான். நான் படுகிறபாட்டிலை நீயும் வந்து நிற்கிறியோ என்பான். அடுத்து கண்டாலும் இப்படிச் சொல்லிப் புகழ்ந்தாலும் இப்பொழுது வசதியில்லை பிறகு பார்ப்போம் என்பான். இந்த நிலைமை இன்று நாம் கண்ணால் காண்கிறோம்.

கற்றி லாதானைக் கற்று நல்லனே காம தேவனை ஒக்குமே
முற்றி லாதானை முற்றனே யென்றுமொழியி னுங்கொடுப் பார்இலை
பொத்தில் ஆந்தைகள் பாட்டறுப் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்த னுய்அமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பு இலாத பணக்காரனை நன்கு படித்தவனே என்றும் அதல்லாது கற்றபடி நன்கு நடப்பவனே என்றும் அழகில் மன்மதனை ஒப்பவனே என்றும் நல்லறிவு முற்றப் பெருதவனை நல்ல முதிர்ந்த அறிவுடையவனே என்றும் இத்தகைய தனவந்தர் கொடுக்கப் போறவர் அன்று. அப்படி ஒருவரும் இல்லை, நீர் அவரைப் புகழும் பாடலிற்கு பரிசு கொடார். ஆனதினுலே மரப்பொந்துகளில் வசிக்கும் ஆந்தைகள் தம் பாடலை குறைத்திடாத திருப்புகலூர் என்னும் தலத்தைப் புகழ்ந்து புலவர்களே பாடுமின்கள். அப்படி எனின் எல்லாத் தேவ உலகிற்கும் தலைவனுகப் பொருந்தி தேவ உலகை ஆள்வதற்கு யாதும் ஒருசந்தேகமும் இல்லை:

கல்வி பயிலாது சாலத்தால் பணம் பெற்றவன் எப்பொழுதும் பணம் சேர்ப்பதில் அக்கறையாக இருப்பான் அன்றி வேறுசெயல் அறியான். அடுத்து ஒரு சதம் கொடுப்பதென்ருல் அவனுக்கு எவ்வளவோ மனக்கொதிப்பு ஏற்படும். அவன் தான் கொடுக்கச் சிறிது மனம் கொண்டாலும் மனைவி மக்கள் நெருப்பைப் போல் சீறுவார்கள். இது இன்று காணும் இயற்கை அதனால படிப்பு இலாதானை படித்தவனே மன்மதனே என்று பாடினும் கொடுப்பார் இல்லை என்றுர்;

மரப்பொந்தில் ஆந்தைகள் பாட்டு ஆருத காட்சி இன்றும் திருப்புகலூரில் காணலாம்.

**தைய லாருக்கோர் காம னேயென்றும் சால நல்வழக் குடையனே**
**கையு லாவிய வேல னேயென்று கழறி னுங்கொடுப் பார்இலை**
**பொய்கை ஆவியின் மேதி பாய்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்**
**ஐய னுய்அமர் உலகம் ஆள்வதற் கியாது மையுற வில்லையே.**

பெண்கள் பலருக்கும் இச்சை சொள்ளும் படியான மன்மதனே என்றும் மிகவும் நல்ல பழக்க வழக்கங்கள் உடையவனே என்றும் கையில் தவருது எந்நேரமும் ஏந்திய வேல் உடையவீரனே என்றும் இப்படியாகப் தனவந்தரைப் போற்றிப் பாடினுலும் கொடுப்பார் இருவரில்லை. ஆனுல் குளத்தில் இருந்து எழும் ஆவியை மேகம் என நினைத்து அதன் மீது எருமைகள் பாய்கின்ற புகலூரை புலவர்களே நீவிர் பாடுங்கள். பாடினுல் தேவர்களுக்கும் தேவ உலகிற்கும் ஒருகடவுளாக இருந்து நீவிர் ஆண்டு கொண்டிருப்பதற்கு யாதும் ஒருசந்தேகமில்லை,

பெண்கள் அழகுடைய ஆடவனை விரும்புதல் இயல்பு, ஆனதினுல் தனவந்தரை நீர் பொருள் பெறும் பொருட்டு அணுகும் போது அவரை தையலாருக்கோர் காமனே எனச் சொல்வது புகழ்ந்துரை;

அடுத்து கொடையின் சிறப்பு ஓர் நல்வழக்கு. எனவே அதனைக் குறிப்பாய் உணர்ந்திட சால நல்வழக்கு உடையவனே என புகழ்தல் கூறினுர், அடுத்து முன் காலத்தில் வீரத்திற்கேற்ப வேல் வைத்திருத்தல் ஓர் சிறப்பு, பலராலும் கணிக்கப்படுவது ஆனதினுல் வேல் ஏந்தியதை புகழ்ச்சியின் சிறப்பாகக் கூறினுர்,

எருமை மேகத் தொடரினைக் கண்டு பாய்தல் இயல் பாதலின் பொய்கை ஆவியின் மேதி பாய் என்றனர், ஐயனுய் என்றது பலராலும் வழிபட்டு உய்தி பெறும் நல்நிலை எய்தப் பெறல் குறிப்பிடப்பட்டது.

**செறுவி னிற்செழுங் கமலம் ஓங்குதென் புகலூர் மேவிய செல்வனை**
**நறவம் பூம்பொழில் நாவலூரன் வனப்பகை அப்பன் சடையன் றன்**
**சிறுவன் வன்றொண்டன் ஊரன் பாடிய பாடல் பத்திவை வல்லவர்**
**அறவ னுர்அடி சென்று சேர்வதற் கியாது மையுற வில்லையே.**

வயல்களைச் சேர்ந்த நீரோடைகளில் செழுமையான தாமரை ஓங்கி வளரும் தென்னுடான புகலூர் என்னும் தலத்தில் வீற்றிருந்தருளும் எம் செல்வனை சிவனை தேனதுளிக்கும் பூக்கள் மலர்ந்த சோலைகள் நிறைந்த திருநாவலூரைப் பிறப்பிடமாகக் கொண்ட நம்பியாரூரன் (சுந்தரன்) வனப்பகை என்னும் பெண்ணின் தந்தை சடையன் என்னும் அந்தணனின் மகன் வலிதே தேடிவந்து ஆண்கொள்ளப் பெற்ற வன்தொண்டன் திருவாரூரில் சிறப்பெய்திய ஆரூரன் பாடிய பாடல் பத்தாகும் இவற்றைப் பாடவல்லவர் கருணையே வடிவாகி தருமமே உருவாய சிவனைச் சென்று சேர்வதற்கு யாதுமோர் ஐயுறவில்லை.

இஃது பதிகம் ஓதுவார் பெறும் சிறப்புகள்பற்றி பேசுகின்ருர்.

தாமரைகள் வயல்களில் பரந்துள்ள நீர் நிலயங்களில் வளர்ந்து காணப்படுவதனுல் செறுவினில் ஓங்கிய தென்புகலூர் என்ருர். தென் என்றது தமிழ்நாட்டின் விசேடம் பற்றி. வடக்கிலும் தெற்கு அருள் நிலையால் என்றும் ஓங்கியபடியால் தென்புகலூர் என்றது. வனப்பகை அப்பன் என்றது சிங்கடி வனப்பகை என்னும் இரு பெண்கள் கோட்புலி நாயனுரின் மக்களாவர். கோட்புலிநாயனுர் இல்லத்திற்கு சுந்தரமூர்த்திசுவாமிகள் சென்றபோது கோட்புலியார் சுந்தரர் பெருமானை உபசரித்து இருபெண்களையும் சுந்தரர் பெருமானுக்கு அடிமைவேலை செய்யும்படி கொடுத்தார். ஆனுல் சுந்தரர் பெருமான் அவர்களை மக்களாக்கிக் கொண்டு தம்பதிகத்து வைத்து தன்னை அவர்கள் தந்தையாகப் போற்றுதல் வழக்கம். இப்படியாக பல பதிகங்களிலும் காணலாம் சிங்கடி வனப்பகை என்ற பெயர் பலவிடமும் காணப்படுவதுண்டு.

சடையன் தன்சிறுவன் என்று இவர் சடையனுர் என்னும் அந்தணரின் மகன் என்றது. பெரியோர் பிறப்பிடத்தை பெரிதாக போற்றல் மரபு. யோகசுவாமிகள் இலங்கையைத் தனது பிறப்பிடமாக தனது பாடல் பலவற்றல் போறறல் காண்க.

# யோகசுவாமிகள் வாக்குகள்

## தமிழனுடைய நடத்தையே அவனைத் தாழ்வுற வைக்கிறது என்ருர் யோகசுவாமி

ஒருநாள் ஒருவரை யோகசுவாமி நோக்கி ஒய்காணும் தமிழன் நெடுக நெடுக அடி வாங்குகிருன். இவன் அடிவாங்காமல் வாழலாம். இவன் நடக்கிற நடத்தையில் இலங்கையால் ஒருநிலையில் கலைக்கப்படலாம். இது இவன் செய்யும் பழிகட்கு ஏற்படும் தண்டனை. சிங்களவரைப் பகைப்பதிலோ அல்லது குறை கூறுவதிலோ பயனில்லை.

ஆனுல் நாலுபேர் நல்ல தவநெறியில் ஒழுகி அமைதியாக இருந்து தமிழன் வாழவேண்டுமென நினைத்தால் நிச்சயம் இவன்பாடு வெற்றிதான். இன்றைக்கு நன்நெறிப்பட நாலுபேரைக் காண முடியாததுவே வலையாகும் என்ருர். இந்த உண்மையை நமது நாட்டில் யாருணர்வார்.

தவம் என்ருல்வஞ்சனையும்பொருமையும் கோபமும் பகையும் நீங்கிய உண்மை வாழ்கையாகும்.

ஒழுக்கம் என்பது பிறன் பொருளை விரும்பாது ஆரவார ஆசை யிலாது குரங்குபோல மனதை கட்டுப்பாடிலாது கண்டபடி ஒழுகவிடாது அடக்கமுடன் வாழ்தலாகும்,

இப்படி இருந்து நாலு பேர் சிந்தித்தால்நாட்டில் தமிழன் விடுதலை அடைந்து உலகில் நீதியை ஆத்மீகத்தைவளர்த்திட வலுஉடையவனுவான்என்பதை இளைஞர் சமுதாயத்திற்கும் கன்னிப் பெண்கள் சமுதாயத்திற்கு சந்திரதீபம் தெரிவித்துக் கொள்கிறது;

## தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையாகும்வரை நான் காரில் ஏறேன் என்ருர் யோகசுவாமி.

தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தில் திரு, செல்வநாயகம் சத்தியாக்கிரகம் நடத்திடும் காலத்தில் அவர் கோரிய சமஷ்டி அரசியல் கோரிக்கையை ஏற்க மறுத்து இனவெறிக் கலகங்கள் ஏற்பட்டன. அதனுலே பல உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டு வந்தன. 1958ஆம் ஆண்டில் பெரும் இனக்கலவரத்தைத் தொடர்ந்து மீளவும் இனக்கலவரங்கள் ஏற்படும் நிலை நிலவியது, அக்காலத்தில் பிரதமராக திரு. பண்டாரநாயக்கா இருந்தார்.

இந்தப்பயங்கர நிலையில் வெளியூர்களில் வாழும் தமிழ் மக்கள் நாளும் பெரும் பயத்துடன் வாழ வேண்டிய நிலை இருந்தது. அப்பொழுது பலர் யோகசுவாமியிடம் சென்று தங்கள் துயரத்தை எடுத்துக் கூறினர்;

அதை உணர்ந்த யோகசுவாமி ஓர்விரதம் பூண்டார். அதுதான் தமிழனும் சிங்களவனும் ஒற்றுமையாகும் வரை நான் காரில் ஏற மாட்டேன் என்றதே அந்த விரதம். அதன்படி சுவாமி சிலமாதகாலமாக ஒருகாரிலும் ஏறிச் செல்வதில்லை: அதற்குப் பதிலாக பஸ்ஸில் பிரயாணம் செய்தார்.

இது இப்படி நடந்திட சில நாட்கள் கழித்து திரு. செல்வநாயகமும் திரு. பண்டாரநாயக்காவும் நேருக்கு நேராகச் சந்தித்து ஓர் ஒப்பந்தம் செய்தனர். இந்தஒப்பந்தம் நிகழ்ந்ததும் நாட்டில் இனக்கலவரங் ஒழிந்து பின்னர் சாந்த நிலை ஏற்பட்டது. இந்த நல்நிலை ஏற்பட்ட பின்னர்தான் சுவாமிகள் காரில் செல்லத்தொடங்கினுர்;

இவனைத்தவத்தின் ஆற்றல் எப்படி என்பதை உணரும் படியாக நாம் காண்பிக்கிருேம்.

## 'உ'வைத் தள்ளிவிட்டு இரும் என்ருர் யோகசுவாமி.

மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி ஆங்கிலம் பயிற்சியாற்றி பெரும் சேவை செய்த திரு, சின்னத்தம்பி என்பவர் நம்மிடம் இச்செய்தியைத் தெரிவித்தார்.

தான் ஒருநாள் றெயிலில் பிரயாணம் செய்யும் போது யோகசுவாமியும் அதே றெயிலில் பிரயாணம் செய்தார். நான் சுவாமியைக் கண்டு வணங்கிட என்னை நோக்கி நீர் என்ன தொழில் செய்கிறீர் எனக் கேட்டார். நான் அதற்குப்பதிலாக நான் சுவாமி உபாத்தியாயராகக் கடமை யாற்றிக் கொண்டிருக்கிறேன் என்றேன்,

உடன் சுவாமி என்னைப் பார்த்து 'உ' வைத் தள்ளி விட்டு இரும் என்ருர்: அப்பொழுது எனக்கு அது தெளியாததை உணர்ந்து சுவாமி பின்னரும் 'உ' வைத் தள்ளிவிட்டு பாத்தியாராக இரும் என்ருர். ஏன் பாத்தியார் என்று தெரியுமோ? நீரைத்தேக்கும் பாத்தியாராக இரும் என்று கூறி பின்னர் இன்னும் தெளிவாக; மாணவர்கள் என்னும் பாத்தியில் அறிவு ஒழுக்கம் என்னும் நீரைத்தேக்கி மாணவர் என்னும் பயிர் செழித்து வளர சேவை செய்யும் பாத்தியாராக இரும் என்ருர்,

எமது இலங்கை நகரில் உள்ள தமிழ்க் கல்லூரிகள் வித்தியாலயங்கள் ஆசிரியகலாசாலையில் கடமையாற்றும் எத்தனை அதிபர்கள் இதனைத் தெளிந்து கடமை செய்யவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லார்? அதுவன்றி அவர்கள் மேற் பார்வையில் கடமை புரியும் எத்தனை ஆசிரியர்கள் இதன் கருத்தை உணர வல்லார் என்பதுவே சந்திரதீபத்தின் சந்தேகமாகிறது.

ஏனெனில் ஆசிரியர்கள் பலர் தமது கல்லூரிகளில் மாணவரைக் கொண்டு சிகரட் வெற்றிலை தேத்தண்ணீர் வடை இவைகளை வேண்டித் தாம் மாணவர் முகப்பில் பல ஒழுக்கமற்ற செயல்களைச் செய்தும் தங்கள் மனக் கோட்பாடுகளை நிறைவேற்ற மாணவரைப் பிழையான வழியில் செலுத்தியும் பாடசாலை வகுப்பில் மது அருந்திய நிலையில் சென்றும் இப்படியான பல செயல்கள் நடப்பதை சந்திர தீபம் நேரில் அவதானித்துள்ளது.

ஆகவே நமது தமிழ் ஆசிரிய சமுதாயம் காற்சட்டை போட்டபடியால் தாம் ஆங்கிலேயரைப் போல் உயர்ந்தவர் எனப் பேதமையான அகந்தையைக் கொள்ளாமல் நாம் தமிழ்க் கலாச்சாரத்தை நாகரீகத்தை பேணவும் வேண்டும் என்பதை தமிழ் ஆசிரியகுலம் நினைக்கட்டும் ஆசிரியராக இருப்பவர் பிழை செய்தால் சமுதாயம் மனித நிலையில் நீங்கி மிகு சுலபமாக மிருகமாகமாறும்.

ந்து பாருங்கள் என்ன நடக்கும் என்றேன்.

அவரும் நீங்கள் சொல்வது சரி சுவாமியினது வாக்கு எனக்கு ஒரு வரப் பிரசாதமாக இருந்தது உண்மையில் சுவாமியின் ஆசிவாதத்தை பல சந்தர்ப் பங்களில் நான் பழுதாகப் போகாமல் காத்துளது என்றார்,

இதைக் கேட்டு சற்று முன்னர் திகைப்பூற்ற எனது உள்ளம் கவலை நீங்கி மலர்ச்சியடைந்தது:

இதை நாம் யாவர்க்கும் விளக்க வைப்பதெனின் மரம் பருவத்தில் பழுத்தால் உலுப்பியும் பழம் பெருவாரி ஒரேகாலத்தில் பெறுவது போன்று சிலர் கால நிலையில் பணம் சேர்க்கும் வாய்ப்பு ஏற்பட்டால அதிக பணம் சேகரித்து பின்னர் இன்னொரு காலத்தில் மரம் வெறுவிலியாகவரும் காலத்தில் ஒன்றுமில்லாது போதல் போல வாழ்வை ஆக்கல் நல்லதல்ல.

# பயப்படாதே நான் தோன்றாத் துணை

## என்றார் யோகசுவாமி.

1952ம் ஆண்டில் யாழ்ப்பாண நாட்டில் மதுவை நீக்கி யாழ்ப்பாண நாட்டை புனிதமடைய வைக்க வேண்டும், குடியால் பல குடும்பங்கள் நாசமாகின்றன, இழிந்த தொழிலான மதுச் சேர்த்தலில் ஈடுபடும் மக்களை நம் வேறு தொழில் காட்டி அவர்களை இழிந்த குலத்தால் மீட்டு மேற்குலத்தவராக்க வேண்டும். எமது நாட்டில் மக்களை மதுச் சேர்க்க மரம் கொடாமல் பண்ணச் செய்ய வேண்டும் பசுக்களை இறைச்சிக்குவிற்காது நாம் பாதுகாக்க வகை காணவேண்டும் இவை எல்லாம் குப்பை கூளங்களை கூட்டி எடுத்து வீடுவாசலை புனிதப்படுத்தும் செயல் போலாகுமென்று சுவாமி அடிக்கடி எமக்கு கூறி இப் பணியில் எம்மை ஈடுபடுந்தாது ஈடுபடும்படி செய்தனர்.

இந்தப் பணியில் நாம் ஈடுபடலாலே அன்று நமக்குப் பல மதுசேர்க்கும் மக்களாலும் மது அருந்தும் வேளான் மக்களாலும் இரகசிய மது வியாபாரிகளாலும் பல பயமுறுத்தல் ஏற்பட்டன. வல்வெட்டித்துறை சங்கானை பேன்ற இடங்களிலும் நாம் வாழும் இங்களிலும் பல பயமுறுத்தல் நேரில் நிகழ்ந்தன; ஒருநாள் அப்பொழுது இந்தப் பயமுறுத்தல் கவலையுடன் நான் யோகசுவாமி வீதியால் சென்ற நேரம் மனத்தால் வணங்கி ஒரு புறமாக நின்றேன்.

என்னைக் காணாதபடி வீதியால் சென்ற அவர் தமக்குள் பேசுவார் போல் நான் குருபரனாவேன் எல்லோருக்கும் தோன்றாத்துணை என்று தன் பாட்டில் கூறியபடி சென்றார்

சிவன் சிவச் சொரூபமாகி பேரின்ப நிலையடைந்த பெருமகான்கள் வாக்கு பொய்ப்பதில்லை. இதனை தொல்காப்பியரும் இவர் வாக்கே 'மந்திரமென்ப' என்று கூறுவதில் தவறுண்டோ சிவநெறி உணர்ந்த பெரு மக்களே தெரிவியுங்கள்.

# மருந்திற்கு மாதுளம்பூ கேட்டவர் சீறப்பட்டார்

# சிவதொண்டன் நிலையத்தில் சீற்றத்தீ

கஸ்தூரி முத்துக் குமாரு வைத்தியசாலையில் கடமையாற்றும் ஓர் தொழிலாளியிடம் மருந்துத் தேவைக்காக சிவதொண்டன் நிலையத்தில் சென்று மாதுளம் பூ வேண்டி வருமாறு வைத்தியசாலைப் பொறுப்பாளி திரு. பரராசசிங்கம் பணித்தார்,

அதன்படி அத்தொளிலாளி சிவத் தொண்டன் நிலயம் சென்று வாசலில் நின்று அங்கு பொறுப்பாளியானவரின் பெயர் சொல்லி அழைத்து மாதுளம் பூத்தரும்படி கேட்டாரராம்,

அத்தொழிலாளி தன் பெயர் சொல்லி பூக்கேட்டதை பொறுக்கமாட்டாத சிவ தொண்டன் நிலயப் பொறுப்பாளி கோபமுற்று பெயர் சொல்லியமைக்காக பூக் கேட்டவரை ஏசி பூ இல்லை எனக் கலைத்தாராம், இதனாலே வேதனை உற்ற தொழிலாளி திரும்பிவந்து பரராசசிங்கத்திடம் நிலமையை எடுத்து விளக்கினாராம்.

சில நாட்கழித்து மருந்து வேண்டும்படியாக சிவத் தொண்டன் நிலயப் பொறுப்பாளி வைத்தியசாலைக்குச் சென்றார். அப்போது பரராசசிங்கம் என்ன சோமு மாதாளம்பூ இல்லை என்றாயாம் என்றதும் சோமு அந்த தொழிலாளியிடம் நான் சொன்னனானோ என்ற வாக்குவாதம் எழ தொழிலாளி மருந்தரைக்கும் அம்மிக் குழவியைத் தூக்கி சோமுவிற்குக் காட்டினாராம், பின்னர் நிலைசடையப்பட்டது.

மருந்தம்மிக்குளவி திரு. சோமுவின் கோப நோய்க்கு மருந்தாகி விடுமோ? அடுத்து சிவத்தொண்டன் நிலய நிர்வாகத்தில் சந்தசாமி முதல் இன்னும் வேறு பல நிர்வாகிகளிடம் கோபம் பீறிட்டுவருவது, வஞ்சனை நசிவது. வழக்கமிலாத சழக்குகளும் மலிவன;

பூ சடப் என்று பற் பல வார்த்தைகள் நிர்வாகக் கூட்டத்தில் முனபு பேசப் படுவனவாம்.

# மரத்திலேறி உலுப்பாதே! பழம்விழப் பொறுக்கு என்றார் யோகசுவாமி.

அளவெட்டியைச் சேர்ந்த அருட்கவி விநாசித்தம்பியை அருணோதய கல்லூரியில் சந்தித்தபோது அவர் இந்த வார்த்தையை என்னிடம தெரிவித்தார்.

நமது சந்திரதீபத்தில் தாம் தமது தொண்டுக்குக் கூடுதலாகப் பணம் பெறுவதாக நாம் குறிப்பிட்டது தவறு என்று நம்மிடம் அதுபற்றிக் கவலை தெரிவித்த அருட்கவி என்னை நோக்கி நான் ஒருபோதும் கூடுதலாக நமது சேவைக்குப் பணம் பெறுவதில்லை, எதோ தருவதை வாங்கிக்கொள்வேன் என்றார்

பின்னர் என்னை நோக்கி யாரேனும் இப்படி எழுதச் சொன்னாரா என்றார். அப்பொழுது நான் இல்லை யாரும் அப்படிச் சொல்லவில்லை அக் கட்டுரையை நானே எழுதினேன் என் மனத்திலே அப்படி ஒரு நிலை தோன்றியது. உங்களை அவமானப்படுத்தும் நோக்கமாகச் சொல்லவில்லை. இன்று எம்சமய நெறியில் ஏற்படும் பழுதுகளை சுட்டிக்காட்டி மக்களை உணரவைக்கும் நோக்கமாகவே அச்செய்தி குறிப்பிட்டேன் ஏனெனில் தொண்டு வியாபாரமாக்கப் பட்டால் பின்னர் அது சைவ நன் நெறியை நல வாழ்வை முற்றாக மாசுபடுத்தி விடும் என்றேன்;

நீங்கள் எனது நண்பர் உங்களை மனம் துயருறுத்த நான் செய்யவில்லை என்றதும் அருட்கவி என்னை நோக்கி ஆம் பலகாலமாக உங்களை எனக்குத் தெரியும் உங்கள் மகனைக்கூட எனக்குத் தெரியும் அவரிடமே நான் உமது அப்பாவுடன் வலுகிட்ட உளளோம் எனக் கூறினேன். என்று பல கதையும் சொல்லி பின்னர் என்னிடம் நமது கருத்தை முன்னர் யோக சுவாமியும் சொல்லியுள்ளார் என்றார்.

அருட்கவி தொடர்ந்து சொன்னார் ஒருநாள் யோகசுவாமியைத் தான் சந்தித்த நேரம் தன்னை நோக்கி விநாசித்தம்பி பழம் பழுத்தால் மரத்திலேறி உலுப்பாதே விழ விழப் பொறுக்கு என்றவர் ஆதலினாலே நான் விழ விழப் பொறுக்குகிறேனே அன்றி மற்றைய பிரசாரகர் போல் ஏறி உலுப்புவதில்லை என்றார்.

நான் அதற்கு வேடிக்கையாக ஓம் 'எருங்கோ' வாரியார் நன்றாக உலுப்புவார். பணக்காரர் பட்டுச் சேலை விரிக்க நல்லாய் கொட்டுண்ணுது. ஏன் எங்கடை ஆக்களும் சிங்கப்பூர் போய் உலுப்பியதில் பிள்ளையாருக்குள்மறைத்துக்கொண்டு வந்து அம்பிட்டு பின்னர் கும்பிட்டு ஐயோ இதை எடுத்துக்கொண்டு என்னை விட்டிடுங்கோ என்று பலமுறை கும்பிட்டுக் கும்பிட்டு உலுப்பிக் கொண்டுவந்ததைக் கொடுத்த வரலாறு உண்டு.

வாரியார் உலுப்பிய பழம் அவரை பூசை செய்யும் சாமியால் மொட்டந்தலையில் அடிவாங்க வைத்தது.

சிவத்தமிழ் துர்க்கை கோயில் மரத்தில் ஏறி உலுப்புறா. ஆனால் மரம் கனக்க உலுப்பினால் படும் என்பது அவருக்கு விளங்காது; இரு

# பெருமாள் கோயில் நிர்வாகத்திலும் சிக்கல்பல

வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோவில் நிர்வாகத்தில் பல தான் தோன்றித் தனமான செயல்களை பஞ்சாயத்தார் செய்தனராம் இதனால் மனவேதனை உற்ற ஓர் அங்கத்தவர் நீதிகளை எடுத்துப்பேசியதனால் தலைவருடன் முரண்பட்டு அதனாலே தலைவரைப் பேசிவிட்டாராம, இந்த நிலையில் அந்த அங்கத்தவரை 2 வருடகாலம் நிர்வாகத்தில் இருக்க முடியாது என நிர்வாகத்தினர் கடிதமூலம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளனராம். ஆனால் அவர்காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிர்வாகம் என்ன செய்தது அல்லது அக் குறைபாடுகள் இல்லை என ஏனைய பொதுமக்கட்கு அறிவித்தால் நல்லதல்லவோ? இதுதான் சைவ நீதியுமோ! ஏசியதற்காக தடை உத்தரவு போட்ட நிர்வாகம் நிர்வாகத்தில் அப்படியான சூழ்நிலை ஏற்படக் காரணம் என்ன என்று சிந்தியாமல் தடை உத்தரவுமட்டும் செய்து மற்றவைக்கு மௌனம் சாதிப்பது சபையின் அதிகாரத்தை ஆங்காரத்தை காட்டுதே அன்றி குறை சொன்னாரின் மனநிலை உணராமை கண்டு சந்திரதீபம் வேதனைப்படுகிறது. தலைவரைப் பேசியவர் மது வெறியில் பேசியிருப்பார் என நாம் நம்பவில்லை.

# சந்திரதீபம் சொல்வது யாவும் உண்மை

மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆசிரியர்,
சந்திரதீபம்:
ஐயா,

''லட்சம் ரூபா பரிசு''

தங்கள் 18.04.80 சந்திரதீபத்தில் மேற்கூறிய தலையங்கத்தில் வந்த அறிக்கையை பார்க்கநேரிட்டது. தங்களின் பிரசுரத்தில் கூறுவது 100க்கு 100 சரியென எல்லா சைவர்களாலும் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை. பிராமணர்கள் பூசாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ கூறவோ பலர் தயக்கத்திலும் பயத்திலும் இருந்து வருகிறார்கள் தாங்கள் இவ்வித புத்துணர்ச்சியை ஊட்டுவது உண்மையை அறிந்து விழிப்பாக இருக்க சைவர்களுக்கு உதவும்.

அந்தணன் என் போன் அறவோன் இவ் நூற்றாண்டில் இவர்களைக் காண்பது அரிது; பஞ்சமா பாவங்களைச் செய்யும் பிராமணர்களும் பூசாரிகளும் மலிந்து இருக்கிறார்கள் இவ்வித சண்டாளர்களை ஒழித்துக் கட்ட தங்கள் சந்திரதீபம் தொடர்ந்து பல்லாண்டு காலம் சேவை செய்யட்டும்;

இப்படிக்கு
தங்கள் பக்தன்
இ. கண்ணப்பர்

## நமது பதில்

உலகெங்கும் வாழும்
தமிழினமே கேள்!

மேன்மையான சைவநீதி பாழ்படும் தன்மைகண்டு திருவருள்வசத்தால் தெய்வநெறியை வளர்த்திட தொண்டு கொண்டோம்; நாம் வளர்க்கமுற்படும் நெறி பேரலிநெறியல்ல உண்மை வேதநெறியாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழரது இனஒற்றுமையே சமயம் என்கிறார் வித்தியாலய அதிபர் தாமரைத் தீவான்

## பழிகாரப் பிராமணா! பாவிப்பணக்காரா! படுபாவி அரசியல்வாதியே! உன் சொந்த நலனுக்காக தமிழ் இனத்தை பிளவு படுத்தாதே. தமிழனது இனஒற்றுமையே முதல் சைவ நன்நெறி யாவது என்கிறது சந்திரதீபம்

எங்கிருந்தாலும் தமிழினம் ஒற்றுமையாக வாழ வேண்டும். எப்படி வாழவேண்டும் எனின் எம் முன்னைப் பெரியோர் காட்டிய அறநெறிபேணி வாழ வேண்டும். அறம் என்றது எல்லா உயிர்க்கும் இனியவனுதல் என்பது பொருள் தன்னை அன்பு மயமாக்கி தனது என்பும் பிறர்க் குரியவனுக்கலே அறம் இதுவன்றி வேறு நாம் அறியோம்.

எம்மை இப்பணியில் ஆளாக்கிய யோகசுவாமிகள் அடிக்கடி சொல்வது: ஓய்காணும் எல்லார்க்கும் நன்மை செய்வது தான் சமயம். அதுவல்லாமல் சமயம் வேறில்லை நன்மையைப் புரிந்து உம்மை யாரென நீர் உணரும் அதுவே சமயம். உம்மை அறிதலே உமது சமயமாகட்டும் என்றார்.

ஆதலினாலே சமயம் என்பது சந்தர்ப்பம் என்ற பொருளாகவும் அமைகிறது. இன்றைய தமிழ்மக்களின் நிலையை எடுத்துக்கொண்டால் ஓர் இனம் என்ற நிலையில் சுதந்திரமாக வாழ முடியாத ஒரு இனம் என்றால் அது தமிழினமே யாகும். தமிழினம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அது அந்தந்த நாட்டின் பிற இனத்தவரின் ஆதிக்கத்தின் கீழாகவே வாழுகின்றது என்பது மறைக்கமுடியாத உண்மை.

இவ்வாறாக தமிழினம் தாழ்வுறக் காரணம் யாது. அதைச்சிந்தித்தால் நாட்டில் எதற்கும் ஒற்றுமையிலாதமையே காரணம்.

இந்த ஒற்றுமையீனம் பெருகியதற்கு காரணம் முதல் எம் தமிழ் மக்களின் பண அவாஞ்சை! பணம் பணம் பணம் என்ற நிலையில் தமிழனுடைய கலாச்சாரங்கள் பறந்தோடின, அறம் அகன்றோடியது. வஞ்சனையின் மறமே தமிழனது இல்லங்கள் எங்கும்குடி கொண்டன.

தமிழ் என்றால் சைவம்: சைவம் என்றால் தமிழ். இதை நாமாகச் செல்லவில்லை எம் பெருமக்களாகி தலைவராகி வழிகாட்டிகளாக அமைந்த திருஞானசம்பந்தர் சுந்தரர் திருமூலர் முதல் நால்வரும் சொன்னார்கள்.

தமிழின் பெருமை காட்ட தமிழின் உயர்வு காட்ட தமிழின் அறம் காட்ட அருள் காட்ட அன்பின் திறங்காட்ட அவதரித்த அவர் நால்வரும தமிழைத் தமது வேதமாக ஆகமமாக புராணமாக ஆக்கினர்.

தமிழில் ஆகமம் சொல்லிய திருமூலர் சொன்னார் ஒன்றேதேவனும் ஒன்றே குலமும் என்றார். இதுவே ஆகமம் என்றார். ஆகமங் இருபத்தெட்டின சாரம் அதுவே. இந்த ஒரு உண்மை நிலைக்குத்தான் எல்லாக ஆகம வித்துவான்களும் வரவேண்டும். எங்கெனு எத்தனை ஆகமம் கற்று பாண்டித்தியம் அடைந்தாரும் இந்த ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற வாய்தலூடாகத் தான் தெய்வ அருளில் தேவ உலகில் தேவராஜ்யத்தில் நுழையலாம் அல்ல தீ இல்லை.

இதனை இன்று தெளிவுபெற்ற யோகசுவாமி ஒன்றே கடவுள் ஒன்றே உலகம் நன்றே என்றும் நாடிப்புரி அந்தக் கொள்கை தான் உண்மை: அதுவன்றி வேறில்லை மற்றையவை எல்லாம் டிபத்தவரின் வெருட்டுதல் வித்துவச் சேட்டைகள் என்றார்.

இந்த ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டில் நலமாகும் ஒற்றுமையைக் கெடுக்க வித்துவான் களுடைய மணிகட்டிய பண்டிதர் களுடைய அவரது பரிவாரங் களுடைய செயல்கள் பலவும் முனைகின்றன என்பதை பலரும் அறிய வெளிப்படுத்து கிறோம்.

திருஞானசம்பந்தர் போலத் தான் யோகசுவாமியும் பிறந்தார் அவரைப் போலத்தான் ஞானம் பெற்றார் ஞானம் தான் கடவுள் ஞானம் தான் கடவுளின் உருவம்.

ஞானம் வரும்படி எங்கள் புலன்களை அடக்கி ஆள்வது தான் தெய்வீகம் இது தரன் சமய உண்மை சைவம் என்பது அதுவே.

இந்த ஒரு நிலையை நாட்டில் ஒற்றுமையீனத்தைப் பரப்பும் எந்த ஒரு செயலும் பெற்றிட வைக்காது. முழுவதும் தீய செயலால் எவரும் ஞானத்தைப் பெறமுடியாது.

நாட்டில் ஒற்றுமை காணமுயல்வது ஒற்றுமைப் படவைப்பது மேலான சிவதொண்டு என பெரியபுராணம் வலியுறுத்துகிறது.

1008 சங்குவைத்து சங்காபிசேகம் செய்வதிலும் ஒரு குடும்பம் ஒற்றுமையாக வாழ்வதற்கோ அல்லது ஓர் இனம் ஒற்றுமையாக வாழ்வதற்கோ முயல்வதும் சிவ தொண்டு என பெரியபுராணம் கூறுகிறது.

இந்த உண்மையை உருத்திர பசுபதிநாயனார் புராணம் 8ம் செய்யுளில் காண்க.

தமிழரது கலாச்சாரத்தில் தருமம் நீதி சால்பு என்னும் மூன்றும் சிவ தொண்டாகக் கருதப் படுவது ஒரு இனம் இந்த மூன்றினையும் உண்மையாம்ப்டி கடைப்பிடித்து வருமேயாகில் எந்த இனத்திலும் பிரிவு எக்காலமும் ஏற்படாது. இந்த உண்மையினை ஒவ்வொரு தமிழ் மகனும் உணரவேண்டும். கடவுளின் அருளைப் பெறும் எவர்க்கும் இது பொதுவான உண்மை நியதிகள்.

இன்றைய தமிழரது நிலையில் தமிழரை பிரிவினைக் குள்ளாக்கும் தீயவராக சமயவாதிகள் அரசியல்வாதிகள் பணக்காரர்கள் சட்டத்தரணிகள் இவர் யாவருமே இருக்கின்றனர்.

நமது சைவத்தின் உண்மை விளங்காத பிராமணர் கிறிஸ்தவ பாதிரிகள் கத்தோலிக்க சன்னியாசிகள் இவர்கள் யாவரும் நமது நாட்டில் இன ஒற்றுமைகளைக் கெடுக்கும் பாவிகளாக வந்துள்ளனர்.

படித்து உயர்வு பெற்ற சமயவாதி யாவரும் தமது சுய நலத்தை உள்ளாகவைத்தும் பணக்காரர் தன்பணத்தினை புகழ் பட்டம் கௌரவம் இவற்றை நாடிட பிரயோகித்தலும் அரசியல் வாதிகள் தத்தம் கட்சி நலன்களை உத்தேசித்தும் ஒற்றுமையாக வாழ விடுகிறார்கள் இல்லை.

இன்று பல கோயில் பிரச்சினைகளில் அந்தந்தக் கட்சியின் சட்டத்தரணிகள் நடத்திடும் நிலைகளைப் பார்த்தால் கோயில் தானும் மதிப்பிற்குரிய இடம் ஒற்றுமையாக வாழவேண்டிய இடம் பகை நீங்கி நிற்கவேண்டிய இடம் என்பதை மறந்து தமது பிழைப்பை வருவாயை பெருக்குவதற்காக பலதீய வழிகளில் தம் கட்சிக் காரரைச் செலுத்தி நிற்பது இனியும் மறைக்க முடியாத உண்மை.

ஆகவே தமிழரை ஒற்றுமையாக வாழ வழிவகுப்பதுவேசைவம் அதுவே இறைவழிபாடு. அதுவே சரியை அதுவே கிரியை அதுவே யோகம அதுவே ஞானம் என்பதை சந்திர தீபம் உறுதியுடன் கூறுகிறது.

ஆதலினாலே நமது வித்தியாலய அதிபரின் பாடலை கீழே தருவோம்; கவிநயத்தை ஏனையவற்றைநாம் எண்ணாது அதனின் பொருள் நயத்தை உணர்வோமாக.

# தமிழ் மதம்

சமயப் பெயராலே சமரா! அதற்கிந்தச்
சமயம் சரியன்று! தமிழர் சமர் செய்யும்
சமயம் வரும் போது சமரைத் தொடுப் போமே!
சமயம் விடுத்திப்போ தமிழர் நெறிநாட் போம்!

தமிழர் நெறி ஒன்றும்! தமிழர் வழி நன்றும்!
தமிழர்க் கொரு போக்காம்! தமிழர்க் கொரு நோக்காம்!
தமிழர்க் கொரு குணமாம்! தமிழர் தனி இனமாம்!
தமிழர் தமை அறியின் சமயம் அதுவே தான்!

தமிழே மதமாகும்! தமிழே சரி சமயம்!
தமிழே பழஞ்சைவம்! தமிழே அருஞ் செல்வம்!
தமிழே நமதாவி! தமிழே நமதுணர்வு!
தமிழே வழிகாட்டி! தமிழே பெருவாழ்வு!

குறளே தனி நூலாம்! குறிக்கோள் நல்வாழ்வாம்!
இறவாதது வாழும்! எமையும் சரியாக்கும்!
மறவாதனை நாளும் மனதாரவே பற்றின்
அறவாழ்வது தானே! அதுவே மதமாம்!

## பெருமாள் கோயில் தேர் உபயம் இப்படி?

வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோயில் தேர் உபயம் பெயரளவில் பஞ்சாயத்தாரின பேரில் உள்ளது, ஆனால் அவர்கள் சிறிதளவு பணம் சேகரித்துக் கொண்டு மிகுதிப் பணத்தை கோவில் காசில் எடுத்துக் கொடுப்பார்களாம், இதற்கு விசேடயேளங்கள் வரவழைக்கப்படுமாம். எப்படி இருகிறது பஞ்சாயத்தபரின் பஞ்சதந்திர உபாயம்? பஞ்ச துட்டரிலும மிஞ்சி விட்டனரே! இதிலும் பார்க்க தேர் உபயம் கோயில் கணக்கில் என்று வெளிப் படுத்தலாமே!

## கும்பிளாவளையில் முகம் துடைத்து யாகபூசை

அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோயிலில் இம்முறை உற்சவத்தினை பார்க்கச் சென்றிருந்த நாயன்மார்கட்டைச் சேர்த ஒரு பெரியவர் சந்திரதீபத்திற்கு இச்செய்தியை நேரில் தெரிவிக்கிறார்.

இம்முறை அளவெட்டி கும்பளாவளைப்பிள்ளையார் கோயில் திருவிழா பரர்க்கச் சென்றுருந்தேன். அப்போது விடியப்புறம் 4மணியளவில் தான் வசந்தமண்டப பூசை நடந்தது. சுவாமி உலாவந்து யாகவாசலிற்கு வரும்நேரம் ஐயர் நித்திரையாகக் கிடந்தவர் எழுந்தோடி வந்து முகத்தைத் துடைத்துவிட்டு யாகவாசலில் தீபம் காட்டினார் ஏன் அப்படி என்று சிலரைக் கேட்டேன் அவர்கள் சொன்னார்கள் யாக பூசை எல்லாம் முன்பே செய்தாச்சு இப்ப தீபம் மட்டும் தான் காட்டுறது என்றார்கள் அப்படியாக ஏன் செய்கிறார்கள் என்று கவலைப்பட்டுக் கூறி முடித்தார்.

அளவெட்டி மக்களுக்கு மாட்டுவண்டிச்சவாரி திருவிழா பாட்டுக் கச்சேரி வாணவேடிக்கை மேளம் சிகரம் லையிற் ஒலிபெருக்கிர் இவை மூலம் சனங்களை வரவழைத்து கோயில் வீதியெல்லாம் நிறையப்பண்ணி தமது பணத்தின் பெருமையை திருவிழாச் செய்து காட்டுவது தான் சைவம். அவர்கட்கு வேதம் ஆகமம் நெறிகள் சமய ஆசாரங்கள் வேண்டியதில்லை. அவர்களை நாம் என் செய்யலாம். அளவான காலத்தில் திருவிழாவை வைதிகமாகச் செய்தால் அது அவர்கட்கு மனம் திருப்தியாகாது. ஆதலினாலே கிராமத்தின் பெருக் கிணங்க அளவுகளை வெட்டியே கருமம் செய்பவர்கள். அவர்கள் முன்னால் வேத ஒழுங்குகளை நாம் சொன்னால் அது ஓட்டைக் குடத்தில் வார்த்த நீராகி விடும் என்றேன்.

## குருவின் அன்னதானம்

பெருமாள் கோயில் குருக்கள் தேர்லன்று அன்னதானம் செய்தார் அதுமட்டுமல்லாது தட்சனையாகக் கொடுத்த ஆயிரம் ரூபாவில் அரைவாசியைக் கோயிலுக்குக் கொடுத்தாராம் இந்தக் குருக்கள் அந்தணர் களுடைய அறத்தை உணர்ந்தமை கண்டு சந்திரதீபம் மலைச்சியடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிச் சாமிகளும் பொய்மையை நம்பும் கொழும்புக் கொடைஞரும் நற்சிந்தனை இல்லாத திருக்கேதீச்சர நிர்வாகமும்

சங்கானை மேற்கு பனிப்புலத்தைச் சேர்ந்த சண்முகம் தம்பிப்பிள்ளை என்பவர் நரசிங்கச்சாமியார் என்று தனக்குத்தானே நாமம் சூட்டியும் தாம் முள்ளைத்தீவிலுள்ள வற்றுப்பழை என்னுமிடத்தில் பிறந்து வளர்ந்ததாகவும் சாத்திரம் கலியாணம் என்பவற்றில் தமக்கும் பாண்டித்தியம் உண்டென்றும் கூறி கொழும்புவாழ் சைவ மக்களிடம் சென்று சாத்திரம் கலியாணப் பொருத்தம் முதலியன பார்த்துச் சமயமறிந்து அயலவர்களிடம் அடுத்த வீட்டாரின் கதைகளைக்கேட்டு அவர்கள் வீடுசென்று அப்படியே கூறி தான் ஒரு உண்மைசாமி என்று வெள்ளவத்தையில் பெரிய பேர் பெற்றுவிட்டார்.

மேற்படி இந்த நரசிங்கச்சாமியார் 1978ம் ஆண்டு மாசிவராத்திரி தினத்தன்று திருக்கேதீஸ்வரம் சென்றிருந்தபோது திருக்கேதீஸ்வர பரிபாலனசபைக் காரியதரிசி நமசிவாயத்தைக்கண்டு அவரைத் தன் வலைக்குள் வீழ்த்திவிட்டார்.

திருக்கேதீச்சரம் பரிபாலன சபைக் காரியதரிசி நமசிவாயம் நரசிங்கச்சாமிமேல் ஏதபட்டபற்றால் அவர் உண்மைச்சாமி என நம்பி அவரைப்பார்த்து நீர் ஊர்மக்களிடம் பணம் சேர்த்து இங்கு ஓர் மடம் கட்டுவது மிகவும் பொருத்தமாகும் என்று கூறவும் சாமியார் "அடித்தெடா அதிஷ்டம் தொலைந்ததெடா கஷ்டம்" என்று தமக்குள் எண்ணிக்கொண்டார் போலும்.

திருகேதீச்சரம் பரிபாலனசபைக் காரியதரிசி திரு.நமசிவாயம் அவர்கள சாமியாருடன் கொழும்புசென்று சைவ மக்களிடம் திருக்கேதீச்சரத்தில் ஒரு அன்னதானமடம் அவசியம் கட்டவேண்டும். அதற்கு இந்த சாமியார் முன்வந்துள்ளார். ஆகவே உங்களால் இயன்ற பண உதவியை இந்தச் சாமியாரிடம் கொடுங்கள் என்று கூறிவைத்தார்.

சாமியாரும் தண்டத்தண்டப் பணமும் சேர்ந்துகொண்டேவந்தது. எவ்வளவு சேர்ந்தது என்று கணக்கிட முடியாதவகையில் காசுசேர்ந்து சாமியாரைத் திணறடித்துவிட்டது.

10.9.1978—ல் திருக்கேதீச்சரத்தில் மடத்துக்கு அத்திவாரமிட்டு அதைக் கட்டி ஒப்பேற்ற முகாரியாக அப்போது மன்னாரில் இராணுவத்தில் வேலைசெய்துவந்த தன் ஊரைச் சேர்ந்தவரை நியமித்தார். நியமித்ததுமாத்திரமன்றி 4, 5 அறைகள் கொண்ட ஒருமடம் கட்டும்படியும் அதற்குவேண்டிய பொருளைத் தான் தருவதாகவும் ஒப்பந்தம் செய்து கொண்டார் வாய்ப்பேச்சளவில்.

இராணுவத்தைச் சேர்ந்தவரும் தன்னூரைச்சேர்ந்தவர்தானே என்று ஒப்பந்தம் ஒன்றுமில்லாமல் வேலையை ஆரம்பித்துவிட்டார். ஆரம்பித்தது மாத்திரமன்றி தன்காசில் அநேகமாகச் செலவழித்தும் மடத்தை ஒப்பேற்றிவிட்டாராம். சாமியார் மாதாமாதமாகச் சேர்த்த பணத்தில் சிறிதளவுதானும் இராணுவத்தைச்சேர்ந்த அந்தக் கட்டட முகாரிக்குக் கொடுபட்டதாம். சாமியார் கொடுத்த பணத்துக்கும் மேலாக முகாரி செலவழித்துக் கட்டிடத்தை ஓரளவு பூர்த்திசெய்துவிட்டாராம். காரணம் யாதெனில் நம் ஊரவர்தானே பணத்தை வேண்டிக் கொள்ளலாமென்ற நினைப்பில்.

மடத்தைக் கட்டியவர் பணத்தைக்கேட்டு நச்சரிக்கத் தொடங்கியதும் கூடிவிட்டுக் கூடுபாய்வதில் விக்கிரமாதித்தனையும் மிஞ்சி விட்ட சாமியாருக்கு மூளை குறுக்குவழியில் வேலைசெய்யத் தொடங்கிவிட்டதாம். மேற்படி கட்டிடம் 7,300 சதுர அடியில் 12 அறைகளும் ஒரு களஞ்சிய அறையும் ஒரு அசெம்பிளி கோலும் குசினியும் சக்கூடியதாக 90 வீதமளவில் கட்டிடம் பூர்த்தியாகிவிட்டதே: இனி இதற்கேன் முகாரி? எனவே எனது பிள்ளைகளைக்கொண்டு வேலைசெய்விப்போம் என்று கருதி தனது மகனையும் பேரனையும் அழைப்பித்து "இவர்கள் இந்த மடத்திற்கு பொருளுதவி செய்தவர்கள்; எனவே இவர்கள்தான் இனி இம்மடத்து வேலைகளைப் பொறுப்பேற்றுநடாத்துவார்கள்" என்று பரிபாலனசபைக் காரியதரிசியிடம் அவர்களை அறிமுகம் செய்துவைத்தாராம். அவரும் "ஆமாம்" என அனுமதி வழங்கிவிட்டாராம். ஆனால் சாமியாருடைய மகனும முன்னைய மடக்கட்டிட முகாரியாக இருந்த இராணுவத்தைச் சேர்ந்தவரும் ஒத்த நண்பர்களாவார்கள். ஆயினும் இந்த அன்னதானமடத்தை வியாபார நோக்கில் நடாத்த முற்படும சாமியாரும் மகனும் செய்யும் சூழ்ச்சிகளை முறியடிக்க முகாரி முனைந்தார்.

இதனைக்கண்ட சாமியார் இனியும் விட்டுவைப்பது சரியில்லை என்று ஆமிக்காரரை அப்புறப்படுத்த எத்தனித்தார். தற்செயலாக இராணுவத்தைச் சேர்ந்தவருக்குக் கொழும்புக்கு மாற்றம் வந்ததும் மேற்படி மடத்துக்காக மஸ்கஸ் கம்பெனியைச் சேர்ந்த திரு. சத்தியமூர்த்தி அன்பளிப்புச்செய்த 90 அஸ்பெஸ்டாஸ் சீற்றுக்களையும் நரசிங்கச் சாமியின் மகன் 8,400 ரூபாவுக்குவிற்று பனிப்புலம் அம்மன்கோவிலுக்கு முன்னாலுள்ள தனதுவீட்டுக்கு மதில் கட்டிவிட்டாராம். பின் அந்த இராணுவத்தைச்சேர்ந்தவர்தான் சீற்றை வித்தாரென புலவருக்கும் ஒவசியருக்கும் காரியதரிசிக்கும் கதையைக் கட்டிவிட்டனராம் தகப்பனும் தனயனும் சேர்ந்து.

பின்பு இராணுவத்தைச் சேர்ந்தவர் சாகக்கு நெருக்க இந்தா இப்போ தாறன் என்று நாட்களைக் கடத்திக்கொண்டு வந்ததுமல்லாமல் கேதீஸ்வரத்திலுள்ள நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு (சாமியார்) இராணுவத்தைச் சேர்ந்தவரின் மகனின் களஞ்சிய அறைக்கும் கொழும்பம்பா மடத்தில் வாடகைக்கு எடுத்த அறைக்கும் கோயிலைச் சேர்ந்தவர்களிடம் பூட்டுவேண்டி நீதவான் புலவர் காரியதரிசி முகதாவில் பூட்டுப் போட்டதாகவும் கேள்விப்பட்ட இராணுவத்தைச் சேர்தவருக்கு கோபம் வந்துவிட்டதாம். இனியாகுதல் இந்தச் சாமியாரைப்பற்றிய உண்மைகளை ஊரறியச் செய்யத்தான் வேண்டுமென நினைத்து பரிபாலனசபைக் காரியதரிசியின் 5ம் இலக்கமுடைய டவுன் வீதியில் இருக்கும் இல்லத்திற்குச்சென்று உண்மைகளைக் கூறிவிட்டாராம். அவர்கூறியது கீழே வருகிறது.

சாமியார் பனிப்புலத்தைச் சேர்ந்தவர். நாகம்மாவைத் திருமணம் செய்து 4 பெண்களும் 2 ஆண்களுமாக 6 பிள்ளைகளுக்குத் தகப்பனாக உள்ளார். இவர் மச்சம் மாமிசம் உண்பர். இப்போது இவருக்கு ரூபா இரண்டு இலட்சத்துக்கு மேல் ஊரில் சொத்துண்டு பணவளவு தேட்டம் இருக்கிறது என்றூர். இவைகளைக் கேட்ட காரியதரிசியும் புலவரும் செய்வதறியாது திகைத்தனராம். இதைப்பற்றி திருக்கேதீச்சர நிர்வாகம் இனிமேலாகுதல் நற்சிந்தனை கொள்ளுமா? கோயில் பேரில் மடம் கட்டுவோர் ஏமாற்றம் செய்தால் இதற்கு இனி பரிகாரம் என்ன? கோயிலினுள்ளே திருமுறையன்றி வேறு ஓதக்கூடாது என கட்டளையிட்ட காரியதரிசி முன்னால் தரப்பட்ட தேவாரத்தை உணர்ந்து தான் நற்சிந்தனை பெறுவாரா?

சுந்தரமூர்த்திசுவாமிகளின் தேவாரக்கருத்துக்களைத் திரு. நமசிவாயம் உணர்ந்துகொள்ளட்டும்; கோயில் பேரில் பணம்சேர்த்து வீணான வேலைகளில் விரயமாக்குவதை விடுத்து உள்ள கோவிலையே நன்முறையில் கட்டிவைக்கலாம்.

திருக்கேதீச்சரத்தைப் பார்க்கும்போது உண்மையில் வேதனையாகவே இருக்கின்றது. மழைவந்துவிட்டால் உள்வீதியில் ஒதுங்க இடமில்லை. கருங்கல்லும் திருப்பணிவேலை குறையுடன் காட்சியளிக்கிறது: வெளிவீதியால் கோவிலை வலம்வரமுடியாத நிலையில் புல்லும் கல்லும் முள்ளுமாகக் வெளிவீதி காட்சிதருகிறது. கோயிலின் உட்பிரகாரத்தில் இன்னும் மூர்த்திகள் பலவற்றை ஸ்தாபித்துக்கொண்டே போகிறார்கள், இவைகளும் ஒரு காலத்தில் பூசையின்றி அரைகுறையில்தான் இருக்கப்போகிறது;

திருக்கேதீச்சரத்தைப் பொறுத்தவரை குடிகள் சொற்பமாகத்தான் உண்டு. ஆதலால் சிவராத்திரி ஒன்றைத் தவிர்ந்த ஏனைய காலங்களில் எழுந்தருளிகளை வீதிஉலாக்கொண்டு செல்வதற்கு ஆட்கள் இல்லாது அவதியுறுவது உண்டு. இது யாவற்றையும் காரியதரிசி அவர்கள் கவனம் எடுக்காது பொய் புரளி பேசுவோரை நம்பித் தானும் பொய் புரளிகளுள் சிக்கி அவதியுறாமல் திருமுறைகள் அன்றி வேறெதுவும் ஓதலாகாது கோவிலினுள்ளே என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்திப் பெரிய புராணத்தைத் தம் அறிவுக்கெட்டிய வரை வாசித்தறிந்து கோயில் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும்படி சந்திரதீபம் கேட்டுக்கொள்கிறது.

# தந்தை ஒலிபெருக்கியை விலக்கினர் மகன் ஒலிபெருக்கியில் முழக்கினர்

சொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதியில் இம்முறை உற்சவத்தில் ஓர் சுவையான சம்பவம் நடந்தது இரவு உற்சவத்தின்போது ஓர்சைவப்புலவர் பிரசங்கம் செய்திட அவர் முன்னால் ஒலி பெருக்கி வைக்கப்பட்டதும் அதை நீக்கும்படி கேட்டு அகற்றிவிட்டு தனது பிரசங்கத்தைச் செய்தார்.

ஆனல் அவரது மகன் உற்சவக் கடைசி நாளில் பேசும் போது ஒலி பெருக்கியில் முழங்கித் தள்ளினர்.

கோயில் குருக்கள் ஒலிபெருக்கி வைத்தால் என்ன வைக்காவிட்டால் என்ன என்ற வேதாந்தக் கொள்கையில் உள்ளவர் சிலதினங்களாக ஒலி பெருக்கியில் மந்திரம் சொல்லாது ஒரு தினம் ஒலிபெருக்கியில் மந்திரம் சொன்னர்,

இதனலே சந்திரதீபத்திற்கு ஒருசந்தேகம் வேதாந்தக் கொள்கைக்கும் ஒலி பெருக்கும் மந்திரட்கும் ஆகமம் எதற்கு? வேண்டியதில்லையே!

# சூடுவிழுந்தான் கோயில் விழாவில் நாய் ஊளையிட்டனர்

கொக்குவில் மேற்கு சூடுவிழுந்தான் பிள்ளையார்கோயில் அலங்கார உற்சவம் அமைதியாக நடைபெற்று வந்தது. ஆனல் அமைதியை விரும்பாது ஆரவாரத்தை விரும்பிச் சிரித்து மகிழும் சில இளைஞர் பூங்காவனம் செய்து இரவோடு இரவாக தேங்கித் தேங்கி திருவிழா நடத்தினர்.

தெருவீதி எல்லாம் ஒலிபெருக்கி குழாய்களைப் பூட்டி பல பல நிகழ்ச்சிகளைத் தங்கள் விருப்பப்படி சேலிச் சித்திரம் நகைச்சுவை மெல்லிசை எல்லாம் நடத்தினர்கள். மழை குழப்பினாலும் மந்திகள் மனமடங்காது மரம்விட்டுப் பாய்தல் போன்று நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நிலையம் போன்று முன்னறிவித்தல் செய்துசெய்து விழாநடத்தினர்.

ஒருகட்டத்தில் அருணகிரிநாதர் பற்றி வில்லிசைநடத்திய நாயன்மார் கட்டைச் சேர்ந்த பிராமணனும் அவனது பரிவாரமும் நல்லூரில் இருப்பதாகச் சொல்பவர் நாய் ஊளையிடும் சிறப்பையும் தன்வில்லிசையில் நிகழ்த்திக் காட்டினர்கள். இளைஞர் சிரித்து அச்சா சோக்கு என மகிழ்ந்தனர்.

# பஞ்சாங்கங்களில் தவறுகள் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

வேலணை கிழக்கு,
வேலணை.

வ. க. செல்லப்பா
மடாதிபதி

உயர்திரு சந்திரதீபம் ஆசிரியர் திரு நல்லையா அவர்கட்கு என் மனமார்ந்த வணக்கம்.

இரண்டு பிராமணி பஞ்சாங்கம் வெளியிடுகிறார்கள். ஒன்றுக் ஒன்று மாதப்பிறப்பு வித்தியாசமும் கோயில் உற்சவவித்தியாசமும் உண்டு இவற்றை சைவபரிபாலன சபைக்கு எழுதினேன். நேரில் கண்டு சொன்னேன். அவர்கள் நடவடிக்கைதும் எடுக்கவில்லை.

வேலணை மகா கணபதி பிள்ளையார் உற்சவம் 5ம் திகதி என்று திருக்கணிதம் கூறுகிறது. வாக்கியத்தின்படி 6ம் திகதிதான் உற்சவம் நடைபெற்றன. திருக்கணிதம் முள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளை காட்டு விநாயகர் கோயில் பொங்கல் 27ம் திகதி என்று போட்டது. வாக்கியம் 13ம் திகதி என்று போட்டது, ஆனால் 13ம் திகதியே பொங்கல் நடைபெற்றது.

இவை தொடர்பாக கவனம் எடுக்குமாறு தாழ்மையோடு வேண்டுகிறேன்.

இப்படிக்கு
வ. க. செ

## மேற்படி கடிதத்திற்குசந்திரதீபத்தின் பதில்

நாம் இதற்கு என் செய்யலாம். சோதிடம் வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்று. தூய மனதுடன் பரிசுத்தமாக நின்று கணித்து பஞ்சாங்கம் வெளியிட வேண்டும்.

உண்மையில் பஞ்சாங்கம் முறைப்படி கணித்து வெளியிடுதல் முக்கியம். இன்று அதன் நல்நிலை கெட்டு வியாபாரமாகிவிட்டது. வியாபார மனப்பான்மையில் நடத்திடும்போது நீதிநெறி, சாத்திரக் கோட்பாடுகள் கெட்டு சுயநலம் தலைதூக்கும்.

இந்த நிலையில் சரி பிழை சொல்ல முனைந்தால் நமது கருத்துக்களை அவர்கள் இருவரும் ஏற்கமாட்டார்கள் ஏனெனில் அவர்களுடைய நோக்கம் தமது பிழையையும் சரி எனச்சொல்ல ஏதாவது பழம் பாடல் தேடுவதே அன்றி உண்மை எதுவென கூர்ந்தறியும் சோதிடஞானமும் இருபிராமணர்களிடமும் இல்லை,

இரண்டு பஞ்சாங்க பிராமணரையும் நான் அறிவேன். இவர்கள் வேத நெறிக்குரியர் அல்லர். ஆகவே வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்றான சோதிடத்தைக் கணித்து வெளியிடுவதற்குரிய ஒழுக்க நெறி கெட்டவுடன் சோதிடத்தின் தூய்மையும் நல்நிலையும் தவறும். நல்நிலை கெட்டவர் கணித்து வெளியிடுவதில் சரி பிழை பேச சந்திரதீபம் தயாராகவில்லை.

புண்ணிய நாச்சியின் சொத்தில் விழாக்கொண்டாடி ஆனந்தமுறும் சைவ பரிபாலன சபையால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை உணருங்கள். புண்ணிய நாச்சியாரின் காசு ஒழிந்தபின் வெறிமுறிந்தவர் பழைய நிலைக்கு வருதல் போன்று சைவ பரிபாலன சபை அதன் பின் ஏதும் செய்யக்கூடும்: இம்போது அவர்கள் நாய்கள் போல் கடிபடுகிறார்கள்: ஐயா! நாய்கள் கடிபடும்போது நாம் அதற்குள் நுழைவது புத்தியீனம்?

# காரணமின்றி நாலுநாள் பூசையிலாது கோயில் பூட்டு! வழிபடுவோர் மனம்பதைப்பு! பூட்டிய பாதகர் கூடிக்குடித்துக் களிப்பு! சைவத்தில் நீதியா சட்டமா பெரிது?

ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவிலில் பணக்காரருக்கும் சுருட்டுத் தொழிலாளர்கட்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் வழிபடுவோர் சபைக்கூட்டம் தலைவரால் பின்போடப்பட்டது பற்றி சென்ற சுடரில் குறிப்பிட்டோம்.

அங்கு பஞ்சபாதகத்துக்கு அஞ்சாத நெஞ்சம்படைத்த பணக்காரரும் கோயில் அங்கியைக் களவெடுத்ததாக சந்தேகிக்கப்பட்ட ஐயரும் சேர்ந்து இரவோடு இரவாக நிர்வாகத்தை வழிபடுவோர் சபைக்கு மாற்றி உறுதி எழுதிய முன்னாள் தர்மகர்த்தா இராசநாயகத்தைச் சந்தித்து அவரிடம் பல வஞ்சனை சூழ்ச்சிகளைச் சொல்லி கோயிலை வழிபடுவோர் சபையால் நீக்கி திரும்பவும் தாம் பொறுப்பேற்றுக் கொள்ள வழிவகுத்தனர்.

அதனாலே இராசநாயகம் என்பவர் முன்னாள் மணியகாரனாக கடமையாற்றியவர் பணக்காரரினதும் வழிபடுவோர் சபையின்கீழ் வேலை செய்ய மனமில்லாத புங்குடுதீவைச் சேர்ந்த பிராமணனதும் நெருக்குதலுக்கு இணங்கி தனது மகன் குமாரசாமி முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியராகக் கடமையாற்றியவரிடம் நிர்வாகத்தை புதிய ஓர் உறுதிமூலம் ஒப்படைத்தார். இந்த உறுதிப்படி வழிபடுவோர் சபையின் அதிகாரம் நீங்கியவுடன் அங்கிகளவெடுத்த ஐயனுக்கு ஓர் அரியசந்தர்ப்பமாகியது. அங்கி களவெடுத்த ஐயன் இந்த சந்தாப்பத்தை பயன்படுத்தி புதிய நிர்வாகியிடம் வழிபடுவோர்சபை இவனிடம் நம்பிக்கைக்கு கொடுதத திறப்பை கொடுத்ததுமன்றி குமாரசாமி யினதும் அவரின் ஆதரவாளரினதும் யோசனைக்கு இணங்கி வழிபடுவோர் சபை காரியதரிசியிடம் சென்று கூட்டறிக்கைப் புத்தகத்தை இல்லாமல் செய்தால் ரூபா 600 தருவதாகவும் பேரம் பேசினானும். எப்படியிருக்கிறது புங்குடுதீவு மூளை. ஏனெனில் எக்காரணம் கொண்டும் இந்த வழிபடுவோர் சபையை இல்லாமல் இயங்காமல் செய்துவிடவேண்டும் என்பது புங்குடுதீவானின் நினைப்பு. அடுத்து வழிபடுவோர் சபையின்கீழ் கோயில் நிர்வாகம இருந்தால் தான் நினைத்தபடி செய்ய இயலாது. திரு குமாரசாமியின் கையில் நிர்வாகம் இருந்தால் அவருக்கு விரும்பிய பானங்களை கொடுத்து அவரை வீட்டோடு இருக்கப்பண்ணிவிட்டு தான் கோயிலில் நினைத்தபடி ஒலிபெருக்கியில் ஊர் மக்களை தன் எதிராளிகளை வம்புக்கிழுத்து நக்கல்பண்ணி அல்லது கும்பிடவரும் மக்களுடன் வம்வார்த்தைபேசி ஊதிட்டு தனக்கு விரும்பிய சில பெண்களுடன் உறவு வைத்தும் கோயிலில் எல்லாப் பழுதுகளையும் செய்யலாம் என்பது தெரியும்.

இதனால் நிர்வாகம் அவரிடம் இருப்பதையே விரும்பினான். அடுத்து கரைப்பிரான் என்னும் பிள்ளையார் கோயிலில் உள்ளவன் அவன் இன்னுமொரு பிராமணனுடைய மனைவியை தன் மனைவியாகக் கொண்டு வந்த ஓர் பிராமணன் மதுச்சேர்க்கும் மக்களுடன் உறவு கொள்பவன் இந்த ஐயனுடைய பஞ்சதுட்டத்தனங்களுக்கு மூளைவகுத்து கொடுப்பவன். இந்தக் கோயிலை பூசையின்றி பூட்டிவைப்பதற்கு மூளைவகுத்சதும அந்த கரைப்பிரான் பிராமணி என்றும் கேள்வி.

இவையல்லாது வழிபடுவோர் சபையில் அங்கத்தவராக நிர்வாகத்தில் இருந்தும் ஜனநாயகரீதியில் சபைத் தீர்மானங்கட்கு அமையாது விலகி விலகி நின்று சபையைக் குலைத்து சீர்கெடப்பண்ணிட முயன்றவாகள் மல்லாகத்தைச்சேர்ந்த ஆ. சின்னத்துரை (தற்போது ஆனைக்கோட்டையில் வசிப்பவர்) கொக்குவில் மேற்கைச் சேர்ந்த த முத்துத்தம்பி ஆனைக்கோட்டையில் வசிப்பவர்களான பிரபல சோடா வியாபாரி க.சி.கைலாசபிள்ளை யாழ்ப்பாணத்தில் பிரபல விபாபார நிலையம் வைத்திருக்கும் த.சண்முகநாதன் (ஆஸ்பத்திரிவீதியிலும் கஸ்தூரியார் வீதியிலும்) ஆசிரியர் த. அழகரத்தினம் தற்போது மன்னார் கச்சேரியில் கடமையாற்றும் வை.நடராசா (சைவப் பொடார் வைரமுத்துவின் மகன்)சுதுமலையைச் சேர்ந்த ஆசிரியர் வே.சுப்பிரமணியம் இன்னும் பலருமாவர்.

உண்மையில் இத்தகையோர் யாரும் கோயிலைப் பூசையின்றி பூட்டிவைத்திட மனங்கொண்டனர் என்றால் எமது சைவத்தின் நிலை என்னாகும்? திறப்பைத் தாங்கள் வேண்டிக்கொண்டு அல்லது பூசை செய்வதற்கு ஏதும் தடையோ வில்லங்கமோ இல்லாதிருந்தும் கோவிலைப் பூட்டிவைத்தது எக்காரணம் என்பதை இவர்கள் விளக்கிடவல்லவரா என்பதை சந்திரதீபம் எடுத்துக்காண்பிக்றது.

எம்பிரான் சுந்தரருடைய முன்னால் தரப்பட்ட தேவாரத்தில் மாசழக்கர் பஞ்சதுட்டர் வஞ்சநெஞ்சர் என்று சொல்லப்படும் மக்கள் இவர்களையாவர் என்பதற்கு ஏதும் ஐயமில்லை.

சைவ நெறியில் ஒருதன் செய்யக்கூடிய பாதகங்களில் மிகமிகக் கொடியது ஓர்கோயிலை பூட்டிவைப்பது. எத்தனையோ கொலை செய்வதிலும் மிது பாதகமாகும். இதை இவர்கள் கூச்மின்றிச் செய்தார்கள் என்றால் இனி நாட்டில் என்ன பழிபாதகங்களைச் செய்யமாட்டார்கள். இவர்கள் தங்களுடைய ஆணவத்தை பணத்திமிரை காடைத்தனத்தை மிருகத்தனத்தை காட்டி மதுவுண்டு நண்டும் கடித்து வெற்றி கொண்டாடினால் இதை சைவ மக்கள் சரியென்று ஏற்கலாமோ?

இவர்கள் கோயில் கட்டிஎன்ன கோபுரம் கட்டி என்ன திருவிழாச் செய்து என்ன இவர்கள் செயலால் ஏதும் ஒரு நற்பலன் நமது தமிழினத்திற்கு ஏற்படாதென்பது உலகறிந்த உண்மை. இவர்கள் சைவ நன்னெறியை இந்த ஊரில் அழித்தொழித்து விட்டனர்.

பஞ்சமாபாதகங்களை கூசாது செய்யவல்ல தீவுப்பகுதி பிராமணி அத்தோடு கோயிலை 4 நாட்கள் வரை பூசையின்றி பூட்டிவைத்தான். இந்த ஐயனை வழிபடுவோர் சங்க அங்கத்தவரோ முன்பு இந்த கோயில் வீட்டில் இருக்கும்படி செய்து இவன் கோயிலில் செய்யும் பாதகங்களை எல்லாம் பொறுமையுடன் சகித்து வந்தனர்.

இவனை ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயில் நிர்வாகம் சொற்ப காலம் பூசைக்கு வைத்திருந்து பின்னர் வேலைநீக்கம் செய்தது. கொக்குவில் புதுக்கோயில் நிர்வாகம் சொற்பநாள் வேலைக்கமர்த்தி வைத்திருந்து பின்னர் கலைத்துவிட்டனர்.

இரவில் இவனும் மனைவியும் மது அருந்துவதாக பலரும் இங்கு பேசிக்கொள்கிறார்கள்.

இஃது இப்படியாக கோயிலில் நன்னெறியை ஒழுக்கத்தை நீதியை விரும்பாத ஒருசில பணக்காரரும் முன்னாள் கிராமசேவகராக (விதானை இருந்தவரின் சில பிள்ளைகளும் அவரது உறவினர்களான அரசாங்க சேவையில இருந்து இளைப்பாறியோரும புதிய நிர்வாகியின் இல்லத்தில் கூடி மதுவும் அருந்தி மாமிசமும் உண்டு கோயிலைப்பூட்டி வைத்த தமது சாமர்தியத்தை மெச்சி மகிழ்ந்தனராம்,

சிறிது காலத்திற்கு முன் இந்தக் கோவிலில் ஓர் அங்கி களவுபோனது. அதை ஐயர் வீட்டில் இருந்த ஓர் பிராமணபபிள்ளை எடுத்ததாகப் பொலிசில் பிடிபட்டவர்,

அடுத்து இந்தக் கோயிலின் அங்கியைக் களவெடுத்தவர் இந்த ஐயரல்லாது வேறு ஒருவரும்இல்லை. பிழையான ஆளை வைத்து விட்டார்கள், உமது மாமன் தானே இவரைக் கொண்டு வந்து சேர்த்தது என்று கோயிலைத்தனது மகனிடம் ஒப்புவித்த இராசநாயகம் சின்னையா நேரில் எனனிடம் அன்றொரு நாள் குறைப்பட்டுக் கொண்டார்'

கோயில் பூசையின்றி பூட்டிக்கிடப்பதை அறிந்து அதனால் வேதனை உற்ற ஊர்மக்கள் உடனே வழிபடுவோர் மகா சபையைக் கூட்டி அங்கு அச்செயல் நிகழ்ந்தமை கண்டு ஒழுங்காக ஜனநாயகரீதியில் ஓர்புதிய நிர்வாக சபையைத தெரிவு செய்து கோவிலின நிர்வாகத்தை மீண்டும் தமக்குக் கொடுக்கும்படி நீதிமன்றமூலம் கேட்கத் தீர்மானித்துள்ளனர்,

இந்த கோயிலை பூசையில்லாமல் பூட்டி வைத்த ஐயருக்கு புங்குடுதீவு மக்கள் சுவாமிநாதத்தம்பிரான் எனப்படும் மணிஐயர் தலைமையில் 'பிரதிட்டாரெத்தினம்' எனப்பட்டம் சிலகாலங்களுக்குமுன் கொடுத்தனர்

இனி புங்குடுதீவு மக்கள் இன்னுமோர் கூட்டம் மணிஐயர் தலைமையில் கூடி சிவத்தமிழ் செல்வி கொடைவள்ளல்கள் சவுக்காரம் சர்வத் முதல் பலருடனும் புங்குடுதீவு வித்துவான்களுடனும் பிரபல அளவெட்டி மேளங்களுடனும் விழாகொண்டாடி தங்கள் ஊரின் பெருமைக்கேற்ப சாதுரியமாக கோவிலைப் பூட்டிவைத்தமைககாக

''பூட்டிவைத்த இரத்தினம்''

என்ற சிறந்த ஓர் பட்டத்தைக் கொடுத்து தமது ஊரின் பழம்பெருமைகளைப் பாதுகாப்பாரென சந்திரதீபம் எதிர்பார்க்கிறது.

பொதுவில் தீவுப்பகுதி பிராமணர் சைவ நனநெறியைத்தங்கள் சுயநலத் திற்காக கெடுக்கிறார்கள் என்று நாம் குறிப்பிட்ட வற்றில் தவறுகள் உண்டா? சிவநெறிஉடைய அன்பர்கள் தெரிவிக்கவும்.

## இப்பத்திரிகை......

இப் பத்திரிகையை நாம் சைவசீலங்களின் உயர்வை நன்கு அனுபவத்தில் தெளிந்தே கருத்துக்களை உலகமக்கட்கு தெரிவித்து வருகிறோம். யாருடனும் பகையில்லை தமிழரின் உயர்ந்த சலாச்சாரங்கள் கீழ்நோக்கிப் போகின்றன. ஆனதினால் நமக்கு எந்ததுயாம் நேரினும் சைவத்தின் உண்மை நிலையை உலகமக்கட்கு தெரியப்படுத்திட எமது சந்திரதீப அச்சுக்கூடத்திலிருந்து இப்பத்திரிகை வெளியாகிறது. வருடசந்தா ரூபா 40 பிரசுரிப்பவர் கொக்குவில்மேற்கில் இருக்கும் வைவ.நல்லையா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org